மித்ரா டைம்ஸ்

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

MITRA TIMES - Tamil & English Monthly

மலர்: XIII இதழ்: 1 | ஜூலை 2026 | ஆண்டு சந்தா ரூ.240/- | விலை ரூ.20/-

Vol.: XIII Issue: 1 | July 2026 | Annual Subscription Rs.240/- | Price Rs. 20

இளமையில் தவிர்க்காதீர்! முதுமையில் தவிக்காதீர்!
– ஆசிரியர் கடிதம்

எப்போதும் நிலைத்திருக்கும் செல்வம் கல்வி!
– கல்வியாளர் K.V.K@R.V.S

சென்னைக்கு குடிநீர் தட்டுப்பாடு வருமா?

ஒரு பேனாவின் விலை 4500/-
-"பேனா"பிரியன் கிருஷ்ணகிரி ரவீந்திரன்!

தமிழ்நாட்டில் த.வெ.க. ஆட்சி

விஜய் அரசியல் எழுச்சியா? திராவிட அரசியல் வீழ்ச்சியா!

- ஒரு அலசல்

இளமையில் தவிர்க்காதீர்! முதுமையில் தவிக்காதீர்!

அன்புடையீர் வணக்கம்!

மனிதர்கள் இளமைக்காலத்தில் குடும்பத்தை காப்பாற்ற ஓடி ஓடி உழைப்பவர்கள் அந்த நேரத்தில் உடலுக்கு தரவேண்டிய மரியாதை தவிர்க்கிறார்கள். அல்லது அந்த சூழ்நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். இதனுடைய விளைவு அவர்கள் முதுமையில் உடல்நிலை பாதிக்கப்பட்டு வருத்தப்படுகிறார்கள். இதைத்தான் "கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்"என்ற பழமொழியைச் சொல்வார்கள்.

முதியவர்களுக்கு வயதானவர்களுக்கு ஏற்படும் முக்கிய பிரச்சனை கை நடுக்கம். இது பதற்றத்தால் மட்டும் ஏற்படுவதில்லை!

கை நடுக்கம் என்பது நம் கட்டுப்பாட்டை மீறி, கை மீண்டும் மீண்டும் தானாக அசையும் நிலையாகும். கப் பிடிக்கும் போது,

எழுதும்போது, கரண்டி பயன்படுத்தும்போது, மொபைலைப் பிடிக்கும்போது அல்லது கைகளை நீட்டி வைத்திருக்கும் போது இது தெளிவாகக் கவனிக்கப்படலாம்.

சில நேரங்களில் மன அழுத்தம், பதட்டம், சோர்வு, குளிர், தூக்கமின்மை, அதிக காபி,

நீண்ட நேரம் சாப்பிடாமல் இருப்பது அல்லது சில மருந்துகளின் பக்க விளைவுகளால் கை நடுக்கம் ஏற்படலாம். இளமையில் திட்டமிட்டு சரியான ஓய்வு, சத்தான உணவு, போதுமான தண்ணீர் குடித்தல்,உரிய உடற்பயிற்சி இல்லாததால் முதுமையில் இத்தகைய நிலை ஏற்படுகிறது. பாதுகாக்க வேண்டிய உடலுக்கு சரியான கவனம் செலுத்தாமல் இளமையில் தவிர்ப்பதால் முதுமையில் தவிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

தன்னை கவனிக்காமல் தாத்தா, பாட்டி அம்மா, அப்பா அக்கா, தங்கை அண்ணன் ,தம்பி , மகன், மகள் என்று எல்லோருக்காகவும் ஓடி ஓடி உழைத்து வயதான காலத்தில் களைத்து போகிறவர்கள், யாரும் தன்னை கவனிக்காத போது நாம் நம்மை அப்போதே கவனித்துக் கொண்டிருந்தால் இப்படி இந்த நிலைமை வந்திருக்காது என்கிற கவலை தோன்றும்.

பெரிய வேலையில் இருந்து ஓய்வு பெற்று வருகின்ற பென்ஷனை மற்றும் இருக்கின்ற இடம் நிலம் மற்றவற்றை விற்றுவிட்டு பணத்தை வங்கியில் போட்டு விடுவார்கள். வங்கியில் கோடிகள் இருந்தாலும், மாதம் வரும் வட்டியிலேயே குடும்பம் நடத்த வேண்டும் என்று நினைப்பார்கள். அசல் தொகையை (Principal) தொட்டால் ஏதோ பெரிய பாவம் செய்தது போல, சொந்தக் கையால் மரத்தை வெட்டுவது போல பயந்துவிடுவார்கள்.

முட்டி தேய்ந்து நடக்க முடியாவிட்டாலும், கண்ணில் புரை வந்தாலும்... “இப்போ என்ன அவசரம், சமாளிக்கலாம்” என்று லட்சக்கணக்கான செலவுக்கு பயந்து ஆபரேஷன்களை தள்ளிப்போடுவார்கள். எனக்கு என்னப்பா நான் வயசானவன் நீ குழந்தைக்கு பீஸ் கட்டணும் அத பாருப்பா

அதுக்கு என்ன வழி பண்ண போற அதை யோசி என்று மகனுக்கு இவர்களே அவன் என்ன சொல்ல வேண்டும் என்பதை எடுத்து கொடுப்பார்கள்.

பாக்கெட்டில் பணம் இருந்தாலும், 70 வயதிலும் ஏசி கோச் வேண்டாம் என்று, ஜன்னல் வழியாக வரும் தூசியை சகித்துக்கொண்டு ஸ்லீப்பர் கிளாஸிலேயே பயணிப்பார்கள். ஏதோ அந்த பணத்தை மிச்சப்படுத்தி தன்னுடைய மகன் ஒருவேளை சாப்பாட்டுக்கு சேமித்து வைப்பது போல நடந்து கொள்வார்கள்.

இந்த பணம் நமக்கு இல்லை, நாளை பிள்ளைகளுக்கு கொடுக்கணும்” என்று தாங்கள் பட்டினி கிடந்து, ஏற்கனவே சாஃப்ட்வேர் வேலைகளில் செட்டில் ஆன பிள்ளைகளுக்காக கோடிகளை சேர்த்து வைப்பார்கள்.

செலவு செய்யாமல் இருப்பதற்குப் பின்னால் ஒரு பெரிய உளவியல் இருக்கிறது. ரூபாயின் மதிப்பு குறைவதை இவர்கள் கண்கூடாக பார்த்தார்கள். ஒரு காலத்தில் நூறு ரூபாய் இருந்தால் ஒரு வாரம் ஓடியது, இப்போது ஆயிரம் ரூபாய் போட்டாலும் பை நிறையவில்லை. நாளை நம் மகன் அல்லது மகள் காலத்தில் இன்னும் நெருக்கடி அதிகமாகும் அப்போது அப்படி திண்டாட கூடாது என்று தன்னை வருத்திக்கொண்டு வாழ்பவர்கள் ஏராளம்.

கஷ்டப்படும் வயதில் சுகங்களையெல்லாம் இளமையில் தவிர்த்து விட்டு, முதுமையில் கையில் பணம் இருக்கிறது, ஆனால் அனுபவிக்க உடல் ஒத்துழைக்காது.

கடைசியில் என்ன ஆகும்? அவர்கள் கண்மூடிய பிறகு பெரிய வங்கி இருப்புகள், ஒருபோதும் உடுத்தாத பட்டுப்புடவைகள், லாக்கரில் துருப்பிடித்த தங்கம், காலி வீடுகள் மிஞ்சும். பிள்ளைகள் தங்களுக்குத் தேவையில்லை என்றாலும் அந்த சொத்தைப் பங்கிட்டுக்கொள்வார்கள். ஆனால் அந்த பெற்றோர்கள் மட்டும் வாழ்க்கையில் எந்த சந்தோஷத்தையும் ருசிக்காமலேயே சென்றுவிடுவார்கள்.

எனவே இளமையில் முறையாக உடலை பராமரிக்க தேவையான வசதிகளை செய்து கொள்வதில் கொஞ்சம் கூட தயக்கம் காட்டாமல் அதை பிள்ளைகளுக்காக மற்றவர்களுக்காக தவிர்த்தால் வயதான காலத்தில் முதுமையில் நீங்கள் படுகின்ற தவிப்பை முன்கூட்டிய உணர்ந்து என்ன தேவையோ அதுவும் உடலுக்கு ஏற்ற தேவை எதுவோ அதை குறைக்காமல் சரியான முறையில் பராமரித்து வந்தால் முதுமையிலும் மகிழ்ச்சியாக இருக்கலாம். எனவே இளமையில் தவிர்க்காதீர்கள் அதனால் முதுமையில் தவிக்காதீர்கள்.

- எம் எஸ் மூர்த்தி

மித்ரா டைம்ஸ்

மித்ரா - 13 ஜூலை 2026 டைம்ஸ்- 1

ஆசிரியர்/வெளியீட்டாளர்:
திரு .எம். எஸ். மூர்த்தி

நிர்வாக ஆசிரியர்:
திருமதி .சுஜாதா மூர்த்தி

செய்தி ஆசிரியர்:
மணவூர் கி.விடாரண்யம்
9789837069

இதன் சிறப்பு ஆலோசகர்கள்:
Dr. **ஆ. தமிழ்மாறன்** எம்.ஏ.எம்.பில்
இயக்குனர் **மு.இரவீந்திரன் (எ) ரவி பார்கவன்**
எஸ்.ரங்கராஜு
ஆர் .சையது சித்திக்

நிர்வாக அலுவலர்;
ஆர். குணசேகரன்

செய்தி இணை ஆசிரியர்கள்:
மதுரை விஜா கண்ணன்
கோவை பி.முத்துராஜ்
சென்னை ராயபுரம் வி. குருசாமி

திருவள்ளூர் து.சண்முகம் எம் .ஏ

சட்ட ஆலோசகர்;
வி.என்.பிரசாத் எம்.ஏ.பி.எல்.

செய்தியாளர்கள்:
பி.வினோத்
பா. விஜயலட்சுமி
ராஜேஷ் கணேஷன்

வடிவமைப்பு:
vidapublications@gmail.com

சந்தா மேலாளர்;
வி.சுபத்ரா
9003107102

அலுவலகம்:
001 இன்ஞ்சக்கல் பிளாக்
சித்ரா அவென்யூ
9 சூளைமேடு ஹை ரோடு
சென்னை. 94
தொடர்புக்கு:
044-23744661,23743007/08
Mitra times 2015@gmail.com
www.mitraimes.com

உள்ளே...

சென்னைக்கு குடிநீர் தட்டுப்பாடு வருமா? — 9

தனி மனிதன் உருவாக்கிய காடு – சாதனையாளர் பத்மஸ்ரீ அசாம் ஜாதவ் பயேங் — 12

திருக்குறளில் வாழ்வியல் சிந்தனைகள் இனிய சொல் – மனிதநேயத்தின் முதல் படி — 14

அதிக சம்பளமா? மனநிம்மதியா? உங்கள் தேர்வு எது? — 29

இலட்சியம் இல்லா வாழ்க்கை வெற்றியைத் தராது! — 42

பார்வை தரும் கண்ணை கவனமாக பார்த்துக் கொள்வோம்! — 44

தமிழ்நாட்டில் த.வெ.க. ஆட்சி

விஜய் அரசியல் எழுச்சியா? திராவிட அரசியல் வீழ்ச்சியா!

- ஒரு அலசல்

சமீபத்தில் நடந்து முடிந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் த.வெ.க. ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியுள்ளது. கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக திராவிட கட்சிகள் ஆட்சி செய்த தமிழ்நாட்டில் இரண்டே ஆண்டுகளில் கட்சி தொடங்கி த.வெ.க. ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியுள்ளது.

ஏறக்குறைய 60 ஆண்டுகளாக திமுக மற்றும் அதிமுக ஆகிய இரு கட்சிகளிடையே மாறி மாறி அதிகாரம் இருந்து வந்ததால், வாக்காளர்கள் மத்தியில் ஒருவித சோர்வு ஏற்பட்டது. மக்கள் இந்த வழக்கமான சுழற்சியில் இருந்து விடுபட்டு ஒரு புதிய மாற்றத்தை எதிர்பார்த்தனர்.

நடிகர் விஜய் தொடங்கிய தவெக கட்சி, திராவிடக் கட்சிகளின் பாரம்பரிய வாக்கு வங்கியை குறிவைத்து ஒரு புதிய "நியோ திராவிட" (Neo-Dravidian) அரசியலை முன்வைத்தது. இந்த புதிய சக்தி, பாரம்பரிய அரசியல் கூட்டணிகளைத் தாண்டி மக்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது.

கடந்த சில ஆண்டுகளாக திமுக அரசு மீது வைக்கப்பட்ட அதிருப்திகளும், அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அடித்தட்டு மக்களை முழுமையாகச் சென்றடையவில்லை என்ற குற்றச்சாட்டுகளும் இந்தத் தேர்தலில் எதிரொலித்தன.

குறிப்பாக சென்னை போன்ற பெருநகரங்களில், திமுக முன்னெடுத்த வளர்ச்சிப் பணிகள் மற்றும் நிர்வாகத்தின் மீது அதிருப்தி ஏற்பட்டு, அவை தவெக வசமாகின.

கூட்டணிக் கட்சிகளிடையே இருந்த அதிருப்திகள் மற்றும் பல தொகுதிகளில் குறைவான வாக்கு வித்தியாசத்தில் திராவிடக் கட்சிகள் தோல்வியைத் தழுவியது போன்ற காரணங்கள் தவெகவின் பெரும்பான்மை வெற்றிக்கு வழிவகுத்தன.

திராவிடக் கட்சிகளின் இந்தத் தோல்வி மற்றும் தவெகவின் எழுச்சி தமிழ்நாட்டின் அரசியல் களத்தில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

திமுக அதிமுக இரண்டு கட்சிகளுக்கு இடையே புதிதாக ஒரு மாற்று அரசியல் கலைஞர்,எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோர் இருந்தவரை திரைத்துறையில்

வந்தவர்கள் யாரும் பெரிதாக வெற்றி பெறவில்லை. வெற்றி பெறாதது மட்டுமல்ல ஆரம்பித்த வேகத்திலேயே கட்சியையும் கலைத்து விடுகின்ற சூழலுக்கு தள்ளப்பட்டார்கள். விஜயகாந்த் ஓரளவுக்கு எதிர்க்கட்சி தலைவர் அளவுக்கு வளர்ந்து வரும் சூழலில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க அவரை அதற்கு மேல் வராமல் பார்த்துக் கொண்டது மட்டுமல்லாமல் அவருடைய அரசியல் வாழ்க்கைக்கு பெருந் தடையாக இருந்தது. இப்படி பலர் எடுத்த முயற்சிகள் தோற்றுப் போன நிலையில் நடிகர் விஜய் தொடங்கும் கட்சியும் அப்படித்தான் இருக்கும் என்று வழக்கம்போல அவர்கள் தவறாக கணக்கு போட்டு விட்டதால் அவர்களுக்கு வெற்றி கிடைப்பதில் பெருத்த ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது.

தேர்தல் நடந்ததற்கு முன்பும் பின்பும் திமுக தான் ஆட்சி அமைக்கும் என்றும் த.வெ.க 10 சீட்டுகளைப் பெற்றாலே பெரிய விஷயம் என்று ஊடகங்களில் பெரிதாக ஏக மனதாக எல்லோராலும் பேசப்பட்டது. ஒரு படி மேலே போய் சொல்ல வேண்டுமானால் தினத்தந்தியில் பணியாற்றி பின்பு தனியாக யூடியூப் நடத்தி வரும் ரங்கராஜ் பாண்டே என்கிற அரசியல் ஆய்வாளர் ஒரு சீட்டு கூட த.வெ.க.ஜெயிக்காது.

அப்படி ஜெயித்தால் நான் அரசியல் பேசுவதை விட்டுவிடுகிறேன் என்று வெளிப்படையாக அறிவித்தார். இந்த சூழலில் தேர்தல் முடிவுகள் யாரும் எதிர்பாராதபடி அமைந்தது. ஆனால் தாங்கள் நினைத்தபடி அப்படியே நடந்தது என்று த.வெ.க.வினர் கூறினார்கள். மே மாதம் பத்தாம் தேதி முதல் ஏறத்தாழ 50 நாட்கள் விஜய்

ஆட்சி எப்படி இருந்தது என்பது பற்றி ஒரு ஆய்வு செய்தால் குறிப்பாக அரசியல் நிகழ்வுகளை ஆய்வு செய்து பார்த்தால் விஜய் அரசியல் வீழ்ச்சி என்பதும் திராவிட அரசியலில் சறுக்கல் என்பதும் நன்றாக தெளிவாகிறது.

நடைபெற்று முடிந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் 108 இடங்களை கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்த தமிழக வெற்றிக் கழகம், திமுக மற்றும் அதிமுக என பெரிய கட்சிகளை பின்னுக்குத் தள்ளி தமிழக அரசியல் வரலாற்றில் புதிய அத்தியாயத்தை எழுதியது.

எனினும் அறுதிப் பெரும்பான்மை இல்லாததால் ஆட்சி அமைப்பதில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்ட தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய், திமுக கூட்டணியில் இடம்பெற்றிருந்த காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவுடன் கடந்த மே மாதம் 10ஆம் தேதி தமிழ்நாட்டின் முதலமைச்சராக பதவியேற்றார். அவருடன் ஒன்பது அமைச்சர்களும் பொறுப்பேற்றனர்.

அதன் பின்னர் இரண்டு முறை அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மற்றும் காங்கிரஸ் கட்சிகளுக்கு அமைச்சரவையில் இடம் வழங்கப்பட்டது. இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஆட்சிக்கு வெளியே இருந்து ஆதரவு தருவதாக தெரிவித்துள்ளன. ம.தி.மு.க. திமுக கூட்டணியில் இருந்து தாங்கள் வெளியேறி விட்டதாக சொன்னாலும் அவர்கள் கட்சியைச் சேர்ந்த இரண்டு எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா செய்ய மாட்டோம் என்று சொன்னதால் ஆட்சியை தக்க வைப்பதற்கு அவர்கள் தயவு தேவையில்லை என்பது உறுதி செய்யப்பட்டு விட்டது.

திமுக கூட்டணியில் இடம் பெற்றிருந்த எல்லா கட்சிகளும் கடைசியாக ம.தி.மு.க என்று அப்படியே த.வெ.க. பக்கம் சேர்ந்து விட்டபடியால் திமுக கூட்டணி என்று ஒன்று இல்லை சொல்லும் அளவுக்கு அரசியல் மாற்றம் ஏற்பட்டுள்ளது. தனித்து விடப்பட்டாலும் தி.மு.க களத்தில் எப்போதும் ஏதாவது ஒரு பிரச்சனையில் முன் இருப்பதால் விஜய் அடிக்கடி சொல்வதைப் போல இரண்டே பேருக்கு இடையேதான் போட்டி ஒன்னுT.V.K இன்னொன்னு D.M.K என்ற வகையில் அரசியல் களம் மாறி இருக்கிறது.

அ.தி.மு.கவைப் பொறுத்தவரை எடப்பாடி தலைமையில் 47 தொகுதிகள் வெற்றி பெற்றாலும் ஒரு அணி தனியாகப் பிரிந்து விஜய்க்கு ஆதரவளித்து அவருக்கு பெரும்பான்மை கொடுத்துவிட்டு மீண்டும் அதிமுகவில் வந்து பேச்சுவார்த்தை மூலம் இணைந்தது. ஆனால் இணைந்தவர்களில் இன்னமும் பிரிந்து இருப்பவர்கள் ஒவ்வொருவராக த.வெ.க. ஆட்சிக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக தங்களது சட்டமன்ற உறுப்பினர் பதவியில் ராஜினாமா செய்து வருகிறார்கள். அந்த வகையில் இதுவரை ஆறு பேர் அதிமுக சார்பில் எம்எல்ஏக்கள் ராஜினாமா செய்து அதில் நால்வர் விஜய் கட்சியில் இணைந்து விட்டனர் இன்னும் இரண்டு பேர் விரைவில் இணைய உள்ளார்கள். இந்த நிலையில் மேலும் 10 பேர் தங்கள் கட்சியில் சேரக் கூடும் என்று த.வெ.க கருதுகிறது. ஆக ஒரு 15 முதல் 25 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்தி அதன் மூலம் தனிப்பெரும்பான்மை பெற்றுவிட்ட பிறகு தங்களுடைய கூட்டணி கட்சிகளை மந்திரி சபையில் இருந்து வெளியேற்றி விடுவது என்று தனி கணக்கு வைத்து விஜய் அரசியல் செய்வதாக அரசியல் நோக்கங்கள் தெளிவுபடுத்துகிறார்கள்.

அதே நேரத்தில் கூட்டணியில் இணைந்த கட்சிகள் அவ்வப்போது ஏதாவது ஒரு விஷயத்துக்கு வெளிப்படையாக கருத்தை தெரிவிக்கிறார்கள் இதன் மூலம் தாங்களும் நிரந்தரமாக ஆட்சியில் இடம்பெற மாட்டோம் எப்போது வேண்டுமானாலும் வெளியேறுவோம் என்கிற மனநிலையை மக்கள் மத்தியில் ஏற்படுத்துகிறார்கள்.

பெரும்பான்மைக்கு ஒரு பக்கம் திட்டங்களை வகுத்து வருகிறது த.வெ.க.

முதல்வர் பதவியேற்ற உடனேயே 200 யூனிட் இலவச மின்சாரத் திட்டம், பெண்கள் பாதுகாப்புக்கான சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை, மாவட்டந்தோறும் போதைப்பொருள் தடுப்புப் படை அமைத்தல் ஆகிய மூன்று முக்கிய கோப்புகளில் விஜய் கையெழுத்திட்டார்.

முதல்வரின் அரசியல் ஆலோசகராக, ஜோதிடர் ரிக்கி ரதன் பண்டிட் வெற்றிவேல் நியமிக்கப்பட்டது சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், பல்வேறு அரசியல் கட்சிகளின் எதிர்ப்பை தொடர்ந்து அந்த நியமனம் திரும்பப் பெறப்பட்டது.

அதேபோல தற்போது ஜனநாயகன் படத்தின் தயாரிப்பாளர் வெங்கட்ரமணாவை தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியாக நியமனம் செய்ததற்கு எல்லா கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

அதேநேரத்தில், முந்தைய திமுக அரசின் 'புதுமைப்பெண்' மற்றும்' தமிழ்ப்புதல்வன்' திட்ட உதவித்தொகை வழங்குதல், அரசு ஊழியர்களுக்கு 2 சதவீத அகவிலைப்படி உயர்வு, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்குதல் போன்ற நலத்திட்டங்களும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டன.

ஜூன் 4 ஆம் தேதி தொழில் முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில் பி.எம்.டபிள்யு உள்ளிட்ட நிறுவனங்களுடன் ஆலோசனை நடத்தப்பட்டது. தொடர்ந்து எல்-டி நிறுவனத்துடன் ரூ.18,600 கோடி முதலீட்டில் 8,200 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் புரிந்துணர்வு ஒப்பந்தமும் கையெழுத்தானது.

விவசாயிகளுக்காக கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட பயிர்க்கடன்களை தள்ளுபடி செய்யவும் முதலமைச்சர் விஜய் உத்தரவிட்டார். இருப்பினும், அவரது தவெக கட்சி அளித்திருந்த தேர்தல் வாக்குறுதிப்படி முழுமையான பயிர்க்கடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என விவசாயிகள் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டனர்.

மின்வெட்டு பிரச்சனை அரசுக்கு பெரும் தலைவலியாக மாறியுள்ளது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர்ச்சியான மின்வெட்டால் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபடும் நிலை உருவாகியுள்ளது. அதேபோல் சட்டம்ஒழுங்கு பிரச்சனை, பெண்களுக்கு எதிரான குற்றங்கள், பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் அதிகரித்து வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன.

மேகதாது அணை. பாலியல் குற்றம், சட்டம் ஒழுங்கு சீர்கேடு, அமோனியா வாயு கசிவு, நீட் தற்கொலை, ஐந்து வருடங்களாக தொடர்ந்து ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணையில் இருந்து நீர் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடாமல் இருப்பது மழையில் நனைந்து வீணாகிப் போன ஒரு லட்சம் நெல் மூட்டை என்று பல்வேறு பிரச்சனைகள் போராட்ட களத்துக்கு விவசாயி களை கொண்டு வந்துவிட்டது.

எந்தப் பிரச்சனை நடந்தாலும் அது ஏற்கனவே நடந்த திமுக சரியாக ஆட்சி செய்யாததே காரணம் என்று த.வெ.க. முதலமைச்சர் முதல் அமைச்சர்கள் வரை அடிமட்ட தொண்டர்கள் முதல் ஆதரவு தரும் வலைதள ஆதரவாளர்கள் பதில் சொல்லி வருகிறார்கள். எத்தனை காலம் இதை சொல்லி வருவாரோ அதை எத்தனை காலம் மக்கள் நம்புவார்களோ அதுவரை விஜய் அரசியல் எழுச்சி பெற்று தான் இருக்கும். அதுவரை திராவிட அரசியல் கொஞ்சம் மங்கிப் போய் தான் நிற்கும் இதுதான் உண்மை. போகப் போக என்ன நடக்கிறது என்று பார்ப்போம்.

- தம்பி முருகானந்தம்

சென்னைக்கு குடிநீர் தட்டுப்பாடு வருமா?

சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளில் அடுத்த 6 மாதங்களுக்கு குடிநீர் கையிருப்பு உள்ளது' என்று நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்தார்கள். பல்வேறு ஏரியில் இருக்கும் 6 டி.எம்.சி. தண்ணீர் மூலம் அடுத்த 6 மாதத்திற்கு சென்னை மாநகரின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய முடியும். அதற்கு பிறகு தண்ணீர் விநியோகம் செய்ய வேண்டும் என்றால் வருகிற அக்டோபர் மாதம் தொடங்கும் பருவ மழை நன்றாக பெய்தால் அதன் மூலம் கிடைக்கும் தண்ணீர் சேமிக்கப்பட்டு, அடுத்த ஆண்டு கோடைக்கு விநியோகம் செய்ய முடியும் என்று அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்,

சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள மாவட்டங்களில் கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. இதனால் பொதுமக்களிடையே குடிநீர் பற்றாக்குறை ஏற்படுமோ என்ற கவலை எழுந்துள்ளது. மேலும், நடப்பு ஆண்டில் தென்மேற்கு பருவமழை இதுவரை சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களுக்கு எதிர்பார்த்த அளவு கைகொடுக்கவில்லை. இந்தச் சூழலிலும், சென்னை மாநகர மக்களின் குடிநீர் தேவையை அடுத்த ஆறு மாதங்களுக்கு எவ்வித தங்குதடையுமின்றி சமாளிக்க முடியும் என்று நீர்வளத்துறை அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

சென்னை மாநகரின் முதன்மை குடிநீர் ஆதாரங்களாக விளங்கும் பூண்டி, சோழவரம், புழல், கண்ணன்கோட்டை தேர்வாய் கண்டிகை, செம்பரம்பாக்கம் மற்றும் வீராணம் ஆகிய ஏரிகளின் மொத்த கொள்ளளவு 13.22 டி.எம்.சி ஆகும். இதில் தற்போதைய நிலவரப்படி, 6.40 டி.எம்.சி (அதாவது 48 சதவீதம்) தண்ணீர் மட்டுமே சேமிப்பில் உள்ளது. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் ஏரிகளின் கையிருப்பு 7.88 டி.எம்.சியாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை மாநகரின் ஒட்டுமொத்த குடிநீர் தேவைக்கு ஒரு நாளைக்கு 1,248.51 மில்லியன் லிட்டர் தண்ணீரும், மாதத்திற்கு சராசரியாக 1 டி.எம்.சி தண்ணீரும் தேவைப்படுகிறது. எனவே, ஏரிகளில் தற்போதுள்ள 6 டி.எம்.சி தண்ணீரைக் கொண்டு அடுத்த 6 மாத காலத்திற்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய முடியும் என அதிகாரிகள் கணக்கிட்டுள்ளனர்.

அடுத்த ஆறு மாத கால தேவையைத் தற்போதைய இருப்பைக் கொண்டு சமாளித்துவிட முடியும் என்றாலும், அடுத்த ஆண்டு கோடைகாலத்தைக் கடக்க வரவிருக்கும் வடகிழக்கு பருவமழை மிகவும் முக்கியம். வரும் அக்டோபர் மாதம் தொடங்கவுள்ள வடகிழக்கு பருவமழை போதிய அளவு பெய்தால் மட்டுமே ஏரிகள் மீண்டும் முழுமையாக நிரம்பும்.

வருண பகவான் கருணை காட்டினால் சென்னைக்கு குடிநீர் கட்டுப்பாடு வராது.

ஒரு பேனாவின் விலை 4500/- -"பேனா"பிரியன் கிருஷ்ணகிரி ரவீந்திரன்!

சிலருக்கு நண்பர்கள் வாழ்க்கை முழுவதும் துணையாக இருப்பார்கள். சிலருக்கு புத்தகங்கள். எனக்கு அப்படிப்பட்ட உயிர்த்தோழன் ஒரு பேனா.

எனது சொந்த ஊர் சிவகங்கை மாவட்டம் கண்டரமாணிக்கம். வணிகவரித் துறையில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற நான், தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் வசித்து வருகிறேன். எழுபது வயதை எட்டிய பிறகும், என் உள்ளத்தில் இன்னும் குழந்தையாகத் துள்ளிக் குதிப்பது பேனாக்களின் மீதான காதல்தான்.

எனக்கு ஆறு வயது இருக்கும் போதே அந்தக் காதலின் விதை விதைக்கப்பட்டது. காரைக்குடி அருகிலுள்ள திருப்பத்தூரில் அரசு பள்ளி ஆசிரியையாகப் பணியாற்றிய என் சித்தி திருமதி ராஜேஸ்வரி அவர்கள், ஆண்டுதோறும் எனக்குப் பேனாக்கள் வாங்கிக் கொடுத்து மகிழ்விப்பார். நான் PUC படிக்கும் வரை இரண்டு நல்ல தரமான பேனாக்கள் தவறாமல் கிடைக்கும். அந்தப் பரிசுகள் பொருட்கள் அல்ல; என் வாழ்வின் திசையை மாற்றிய விதைகள். என் தந்தை காவல்துறையில் பணியாற்றியவர். மதுரையின் பழம்பெரும் நேவி

மதுரை பேனா தாத்தா சீனிவாசன் கடையில்

கம்பெனியில் இருந்து ஒரு கட்டைப் பேனாவை வாங்கிக் கொடுத்தார். ஏழாம் வகுப்பில் என் கையில் வந்த அந்தப் பேனா, இன்று வரை என் சேகரிப்பில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அது ஒரு பேனா மட்டுமல்ல; என் சிறுவயதின் நினைவுச் சின்னம்.

பள்ளிப் பருவத்தில் எனக்கு மிகுந்த ஏக்கத்தைத் தந்தது என் கையெழுத்து. என்னுடன் படித்த சுப்பிரமணியன் என்ற நண்பனின் எழுத்து முத்துக்கள் கோர்த்ததுபோல் அழகாக இருக்கும். என் எழுத்தோ கோழி குப்பையைக் கிளறியது போல இருக்கும்.

தமிழாசிரியர் திருமதி பங்கஜம் அவர்கள் அடிக்கடி அவனது நோட்டைப் பார்த்துக் காட்டி, "இவன் எப்படி எழுதுகிறான்? நீ ஏன் இப்படி எழுதுகிறாய்?" என்று கண்டிப்பார். சில நேரங்களில் விரல்களுக்கு இடையில் பென்சிலை வைத்து அழுத்துவார். வலியால் நான் அழுதிருக்கிறேன்.

ஒரு குழந்தையின் மனம் எவ்வளவு வினோதமாகச் சிந்திக்கும்! சுப்பிரமணியனின் எழுத்து அழகுக்குக் காரணம் அவன் பயன்படுத்தும் பென்சில்தான் என்று நினைத்து, பள்ளி இடைவேளையில் அவனுக்குத் தெரியாமல் பென்சிலை எடுத்துச் சென்று வீட்டில் எழுதிப் பார்த்ததுண்டு. ஆனால் எழுத்து மாறவில்லை. ஏமாற்றத்தால் அழுததுண்டு. இறுதியில் நான் உணர்ந்த உண்மை ஒன்று - அழகான எழுத்துக்கு மந்திரம் தேவையில்லை; பயிற்சி மட்டுமே தேவை.

மளிகைக் கடைகளில் கிடைக்கும் ஒரு பக்கம் வெறுமையாக உள்ள காகிதங்களை சேகரித்து நோட்டாகத் தயாரித்தேன். தினத்தந்தி நாளிதழைப் பார்த்து எழுதி எழுதி பயிற்சி செய்தேன். நாட்கள் மாதங்களானது. முயற்சி பழக்கமானது. பழக்கம் திறமையானது. ஒரு நாள் என் கையெழுத்து என்னை ஆச்சரியப்படுத்தும் அளவுக்கு அழகாக மாறியது.

அந்த உழைப்புக்குக் கிடைத்த மிகப் பெரிய பரிசு என் பணிக்காலத்தில் கிடைத்தது. ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணியாற்றியபோது மாவட்ட ஆட்சியர் ஆய்வுக்கு வந்திருந்தார். என் கோப்புகளைப் பார்த்தார்.

அனைத்தும் இன்க் பேனாவில் தெளிவாகவும் ஒழுங்காகவும் எழுதப்பட்டிருந்தன. "இந்த இருக்கை யாருடையது?" என்று கேட்டுவிட்டு என் மேசைக்கு வந்து கோப்புகளைப் பார்வையிட்டார். பின்னர் "மிக்க நன்று" என்று எழுதி கையொப்பமிட்டார்.

அந்த இரண்டு வார்த்தைகள் இன்று வரை என் மனதில் பொற்கோவையாக பதிந்துள்ளன.

பேனாக்களைத் தேடி நான் பல ஊர்களுக்குப் பயணம் செய்திருக்கிறேன். மதுரையின் பேனா டாக்டர் சீனிவாசன் அவர்கள், திண்டுக்கல்லின் பேனா ஆஸ்பத்திரி, சென்னையின் பழமையான பேனா கடைகள், பெங்களூரின் Nathan - Co., திருவள்ளூரின் ரங்கா பேனா கடை என என் பயணம் தொடர்கிறது. திருவள்ளூரில் வாங்கிய ஒரு பேனாவின் விலை ரூ.4500/-. இந்தப் பயணங்களில் என்னுடன் உறுதுணையாக இருப்பவர் என் அன்பு மனைவி திருமதி கனியமுது அவர்கள். நான் பேனாவைப் பற்றி பேசும் போது சலிப்படையாமல், இணையத்தில் புதிய தகவல்களைத் தேடி எனக்குக் காட்டுவார். என் ஆர்வத்திற்கு உயிர் ஊட்டுபவர் அவர்தான்.

என் தாய்வழித் தாத்தா வியட்நாமிலிருந்து பேனாக்கள் கொண்டு வந்து பரிசளித்துள்ளார். பெல்ஜியத்தைச் சேர்ந்த எங்கள் குடும்ப நண்பர் மிஷல் அவர்கள் Parker பேனாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். அரிசி மணியில் திருக்குறள் எழுதி சாதனை புரிந்த பரஞ்ஜோதி சந்திரமோகன் அவர்களிடம் இருந்து ஒரு பேனாவை நினைவுப் பரிசாகப் பெற்றுள்ளேன்.

எனவே என் சேகரிப்பில் உள்ள ஒவ்வொரு பேனாவிற்கும் ஒரு கதை உண்டு. ஒரு நினைவு உண்டு. ஒரு மனிதர் உண்டு. இன்றும் பேருந்தில் பயணம் செய்யும்போது சுவர்களில் காணும் அழகான எழுத்துக்களை ரசிப்பேன். நல்ல நிப்புள்ள பேனா அல்லது பென்சில் எங்கே கண்ணில் பட்டாலும் வாங்கிவிடுவேன். எழுத்தின் அழகு என்னை இன்னும் மயக்கிக் கொண்டே இருக்கிறது.

கவிஞர் கண்ணதாசனின் பாடல்களும், திருவள்ளுவரின் குறள்களும், எண்ணற்ற சிந்தனையாளர்களின் கருத்துகளும் மனித மனங்களில் வாழ்ந்து கொண்டிருப்பதற்கு காரணம் எழுத்து. அந்த எழுத்தை உலகிற்கு

பேனா பிரியருக்கு மித்ரா டைம்ஸ் மாத இதழை செய்தி ஆசிரியர் வழங்கினார்

திண்டுக்கல் ஷேக் மைதீன் பேனா ஆஸ்பத்திரி கடையில் ரவீந்திரன்

வழங்கிய கருவி பேனா.எனவே நான் அடிக்கடி சொல்வது: "தினமும் பத்து வரிகளாவது கையால் எழுதுங்கள்." அது வெறும் எழுத்துப் பயிற்சி அல்ல; சிந்தனைக்கான பயிற்சி. நினைவாற்றலுக்கான பயிற்சி. விரல்களுக்கும் நரம்புகளுக்கும் பயிற்சி.

இன்று என் பேரன், பேத்தி இருவரையும் பார்க்கும் போது என் பேனா சேகரிப்பை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற ஆசை வருகிறது. "இவை தாத்தாவின் நினைவுச் செல்வங்கள்; பாதுகாத்து வைத்துக் கொள்ளுங்கள்" என்று என் மகனிடம் ஏற்கனவே கூறியுள்ளேன்.

என் வாழ்க்கைப் பயணத்தில் பலர் வந்து சென்றுள்ளனர். பல பொருட்கள் வந்து மறைந்துள்ளன. ஆனால் ஒரு தோழன் மட்டும் இன்னும் என் கையை விட்டு பிரியவில்லை. அவன் பெயர் – பேனா. எட்வர்ட் புல்வெர் லிட்டன் கூறியது போல: "வாளைவிட வலிமை மிக்கது பேனா." நமது சிந்தனையின் நாக்காக விளங்கும் இந்தப் பேனாவை நேசிப்போம். பயன்படுத்துவோம். அடுத்த தலைமுறைக்கும் அதன் பெருமையை எடுத்துச் செல்வோம்.

சந்திப்பு:
மித்ரா டைம்ஸ் செய்தி ஆசிரியர்
கி.விடாரண்யம்

தனி மனிதன் உருவாக்கிய காடு

– சாதனையாளர் பத்மஸ்ரீ அசாம் ஜாதவ் பயேங்

ஒற்றை மனிதனால் ஒரு காட்டை உருவாக்க முடியாது. அது நிஜத்தில் நடக்கச் சாத்தியமில்லாதது என்றுதான் அனைவரும் நம்புகிறோம். ஆனால் அதை நிஜமாக்கியவர் ஜாதவ் பயேங்.

அசாம் மாநிலத்தைச் சேர்ந்த கிராமவாசியான ஜாதவ் பயேங்கை அங்குள்ள மக்கள் ' மொலாய் ' என அழைக்கின்றனர். பிரம்மபுத்திரா நதியில் நமது ஸ்ரீரங்கம் போல ஒரு மாபெரும் மணல்திட்டு. இங்கு 1979ஆம் ஆண்டில் வெள்ளத்தில் அதிக அளவில் பாம்புகள் அடித்து வரப்பட்டிருக்கிறன. வெள்ளம் வடிந்த பின் பாம்புகள் மேலும் பல ஊர்வன இறந்த நிலையில் அங்கே கிடந்திருக்கின்றன. மரங்கள் இன்றி அதிகரித்த வெப்பத்தினால்தான் இந்நிலை எனப் புரிந்து கொண்டபோது ஜாதவ் பயேங்க்குக்கு வயது பதினாறு

பின்னர் இது தொடர்பாக வனத்துறையை அணுகி விசாரித்த போது ஆற்றின் நடுவே உள்ள அந்த மணல் படுகையில் மரங்கள் எதுவும் வளராது. மூங்கில் மரம் வேண்டுமானால் வளரலாம். முடிந்தால் முயற்சி செய்து பாருங்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். ஒருவரும் உதவி செய்யாத போது ஜாதவ் பயேங் தனி நபராக செயலில் இறங்கி இருக்கிறார்.

1980ஆம் ஆண்டில் அசாமில் உள்ள ஜோர்ஹாட் மாவட்டத்தில் கோகிலமுக் இடத்துக்கு அருகில் 200 ஹெக்டேர் மணல் படுகையில் 'சமூகக் காடுகள் வளர்ப்பு' திட்டத்தின்படி வனத்துறையினர், மற்றும் தொழிலாளர்களும் இணைந்து மரக் கன்றுகளை நடும் திட்டம் தொடங்கப்பட்டது. பணி முடிந்ததும் மற்றவர்கள் சென்றுவிட, மரக்கன்றுகளை பராமரித்துக் கொள்ள அனுமதி கேட்டு அங்கேயே ஜாதவ் பயேங் தங்கி விட்டார். பின்னர் வனத்துறையினரும், மற்றவர்களும் இதனை அப்படியே மறந்து விட்டனர். அதன் பின் அந்த பக்கம் யாரும் எட்டிக் கூட பார்க்கவில்லை.

200 ஹெக்டேர் பரப்பில் மூங்கில் மட்டும் வளர்த்து வந்த ஜாதவ் பயேங், பிற மரங்களையும் வளர்க்க முயற்சி எடுத்துள்ளார். ஆனால் மணல் அதற்கு ஏற்றதாக இல்லை என்பதால் தனது கிராமத்தில் இருந்து 'சிவப்பு எறும்பு'களை சேகரித்து எடுத்து வந்து மணல் திட்டில் விட்டு இருக்கிறார். வெகு விரைவில் மண் பயன்பாட்டுக்கு மாறியது. பிறகு

அந்த இடம் முழுவதிலும் விதைகளை ஊன்றியும், பிற மரக்கன்றுகளை நட்டும் பராமரித்து வந்துள்ளார். அடுத்த சில ஆண்டுகளில் அந்த மணல்திட்டில் தாவரங்களும் உயிரினங்களும் கொஞ்சம் கொஞ் சமாகச் செழிக்க ஆரம்பித்தன. இப்படி ஒன்று இரண்டு வருடங்கள் அல்ல, 35 வருடங்கள் ஜாதவ் பயேங் செய்தார். இப்படி 2008ஆம் ஆண்டு வரை இந்தியாவில் யாருக்கும் தெரியாமல் ஒரு காடு பரப்பளவிலும், உயரத்திலும், அடர்த்தியிலும் பெருகிக் கொண்டே சென்றிருக்கிறது. உள்ளூர்வாசிகள் இந்தக் காட்டை மொலாய் காதூனி அதாவது மொலாயின் காடுகள் என்று சரியாகவே அழைக்கிறார்கள். மொலாய் தான் ஜாதவ் பயேங்கின் செல்லப் பெயர்.

2008ஆம் ஆண்டு. ஜிட்டு கலிட்டா என்கிற வனவிலங்கு ஆர்வலர், கோகிலமுக் தீவில் பெரிய வனப்பகுதி இருப்பதாகக் கேள்விப்பட்டு, நம்பவே முடியாமல் தீவில் வந்து இறங்கினார். சில மைல்களுக்கு எதுவும் பசுமையாகத் தெரியவில்லை. பின்னர் தூரத்தில் மரங்கள் புலப்பட்டன. நடக்க நடக்க மாபெரும் வனப்பகுதி கண்கொள்ளாமல் விரிந்துகொண்டே சென்றது. விதவிதமான பறவைகள், பிற உயிரினங்கள். ஜிட்டு, அதிர்ச்சியுடன் நிற்க, சற்று தள்ளி ஒரு மனிதர் தென்பட்டார். அவர் தான் ஜாதவ் பயேங். ஜாதவின் குடிலில் அவரோடு பேசப் பேச, ஜிட்டுவால் ஆச்சர்யத்தை அடக்க முடியவில்லை. தான் பல நூறு ஏக்கர் பரப்பளவில் காடு உருவாக்கிய கதையை ஜிட்டுவிடம் ஜாதவ் பயேங் சொன்னார். அந்தப் பகுதி மக்கள், ஜாதவின் செல்லப்பெயரை வைத்தே 'மொலாய் காடுகள்' என அதை அழைப்பதையும் புரிந்துகொண்டார்.

ஊர் திரும்பிய ஜிட்டு, மொலாய் காடுகள் குறித்து கட்டுரை எழுதி, அசாமிய தினசரி பத்திரிகை ஒன்றில் கொடுத்தார். எடிட்டர் செய்தியை நம்பாமல், 'கதை எல்லாம் நாங்க போடுவது இல்லை' என மறுத்தார். அந்தச் சமயத்தில்தான் 2008ஆம் ஆண்டு தற்செயலாக 115 யானைகள் மொலாய் காட்டு பகுதிக்குள் புகுந்துவிட்டது. அதனை துரத்தி சென்ற வனத்துறையினர் இந்த காட்டைப் பார்த்து அதிர்ச்சியும் ஆச்சர்யமும் அடைந்திருகின்றனர். அரசு பதிவேட்டில் இடம் பெறாத இந்த காடு இங்கே எப்படி சாத்தியம் என்று வியந்திருக்கின்றனர். மொலாய் பற்றி கேள்விப்பட்டு அவரை சந்தித்து தகவல் முழுவதும் அறிந்து மிக மகிழ்ச்சி அடைந்திருக்கின்றனர். கடந்த 35 ஆண்டுகளாக 1,360 ஏக்கர் / 550 ஹெக்டேர் பரப்புள்ள ஒரு மணல்திட்டு காடாகச் செழித்து வளரத் தன் வாழ்க்கையையே கொடுத்துள்ளார்

ஜாதவ் பயேங். ஆற்றிடையே மணல்திட்டின் மீது ஒரு மனிதனால் உருவாக்கப்பட்ட முதல் காடு இதுதான். இத்தனையையும் தாண்டி மரங்கள், காடுகள், இயற்கை சூழ்ந்த இந்தப் பூமியின் மீது அக்கறையுடன் அவர் செயலாற்றிக்கொண்டிருக்கிறார் என்றால், அவற்றின் மீது அவர் வைத்துள்ள சுயநலமற்ற காதல்தான் காரணம்.

2012ஆம் ஆண்டில் டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட ஒரு பாராட்டு விழாவுக்குப் பிறகே, ஜாதவ் பயேங்கின் பிரம்ம பிரயத்தன சாதனை உலகின் கண்களில் பட ஆரம்பித்தது. 'இந்தியாவின் காட்டு மனிதன்' என்ற பட்டம் அப்போது வழங்கப்பட்டது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன் அறிவிக்கப்பட்ட பத்ம விருதுகள் பட்டியலில் ஜாதவ் பயேங்குக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டு கொடுக்கப்பட்டது. 30 ஆண்டுகளுக்கு மேல் குறைந்தபட்ச அரசு அங்கீகாரம்கூட இல்லாமல், காட்டைக் காப்பாற்றிவந்த அவருக்குக் கிடைத்துள்ள பெரிய அங்கீகாரம் இது.

இந்தப் பூமியைக் காப்பாற்ற ஒரு தனி மனிதனால் என்ன செய்துவிட முடியும் என்ற கேள்வி திரும்பத் திரும்பக் கேட்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது. அதற்கான பதிலை ஜாதவ் பயேங் அற்புதமாக உருவாக்கிக் காட்டி உள்ளார்.

தகவல்:மன்னை பாண்டியன்

திருக்குறளில் வாழ்வியல் சிந்தனைகள்
இனிய சொல் – மனிதநேயத்தின் முதல் படி

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந்தற்று.

திருவள்ளுவர் கூறிய இந்தக் குறள், என் அன்றாட வாழ்க்கையில் வழிகாட்டும் ஒளிவிளக்காக உள்ளது. இனிமையான சொற்கள் மனித மனங்களை வெல்வதோடு மட்டுமல்லாமல், நம்பிக்கையையும் நெருக்கத்தையும் உருவாக்குகின்றன என்பதை நான் தினமும் என் வாழ்க்கையில் உணர்ந்து வருகிறேன்.

ஒவ்வொரு நாளும் அதிகாலையில் நடைப்பயிற்சிக்குச் செல்லும்போது பலரைச் சந்திக்கிறேன். ஒரு புன்னகை, ஒரு வணக்கம், சில இனிய வார்த்தைகள் ஆரம்பத்தில் நான் காட்டிய இந்தச் சிறிய அன்பு, இன்று அவர்களிடமிருந்தே எனக்குத் திரும்பக் கிடைக்கிறது. என்னைக் கண்டவுடன் புன்முறுவலுடன் வணக்கம் கூறும் அந்தத் தருணங்கள், மனித உறவுகள் இனிய சொற்களால் எவ்வளவு அழகாக மலர்கின்றன என்பதை உணர்த்துகின்றன.

அதன்பின் குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றிவிட்டு பணிக்குச் செல்கிறேன். காவல்துறையில் பணியாற்றும் எனக்கு, தினமும் பலர் தங்களின் மனக்குறைகளுடனும், வாழ்க்கைச் சுமைகளுடனும், பல்வேறு பிரச்சினைகளுடனும் என்னைச் சந்திக்க வருகின்றனர்.

அழைப்பாணை வழங்கப்பட்டு என்னைச் சந்திக்க வரும் ஒவ்வொருவரையும் முதலில் அன்போடு வரவேற்று, "வாருங்கள்... முதலில் அமருங்கள்." என்று மரியாதையுடன் அமர வைப்பேன். அதன் பிறகு, நான் எப்போதும் தயார் நிலையில் வைத்திருக்கும் தண்ணீர் பாட்டில்களில் ஒன்றை அவர்களிடம் கொடுத்து, "முதலில் தண்ணீர் குடியுங்கள்... பிறகு நிதானமாகப் பேசலாம்." என்று கூறுவேன்.

இந்தச் சிறிய செயல் பலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துவதோடு, "காவல்துறையில் கூட இவ்வளவு அன்பாக வரவேற்று, தண்ணீர் கொடுப்பவர்கள் இருக்கிறார்களே!" என்ற வியப்பையும் உருவாக்குகிறது. நான் செய்வது ஒரு சாதாரண செயல் மட்டுமே. ஆனால், அவர்களின் மனதில் அது மனிதநேயத்தின் வெளிப்பாடாகப் பதிகிறது. அந்த ஒரு தண்ணீர் பாட்டிலும், இனிய வார்த்தைகளும், அவர்களின் மன அழுத்தத்தைப் பாதியாகக் குறைத்துவிடுவதை நான் பலமுறை நேரில் கண்டிருக்கிறேன்.

அவசரப் பணிகள் இல்லாதபோது, அவர்கள் பேசும் நேரத்தில் அலைபேசி அழைப்புகளைத் தவிர்த்து, அவர்களின் கண்களைப் பார்த்தபடியே முழு கவனத்துடன் அவர்கள் கூறும் ஒவ்வொரு வார்த்தையையும் செவிமடுப்பேன். உரையாடலின் இடையே, "அப்படியா... சரி ஐயா... கட்டாயம்...

புரிகிறது..." போன்ற இணைப்புச் சொற்களைப் பயன்படுத்துவேன். இவை வெறும் வார்த்தைகள் அல்ல; "நான் உங்களின் பிரச்சினையை முழுமையாக உள்வாங்குகிறேன்." என்ற நம்பிக்கையை அவர்களிடம் உருவாக்குகின்றன.

ஏனெனில், பல நேரங்களில் மக்களுக்கு முதலில் தேவைப்படுவது தீர்ப்பு அல்ல; தங்களின் பிரச்சினைகளை முழு கவனத்துடன் கேட்க ஒருவர் இருப்பதுதான்.

என்னால் உடனடியாகத் தீர்வு காண முடியாத சூழ்நிலை இருந்தாலும், "என்னால் முடிந்த உதவியை நிச்சயமாகச் செய்கிறேன்." என்று உறுதியுடன் கூறுவேன். அந்த ஆறுதல் வார்த்தைகள் அவர்களின் மனதில் புதிய நம்பிக்கையை விதைக்கின்றன.

மேலும், அவர்களுடைய தொலைபேசி எண்ணைப் பதிவு செய்து வைத்துக் கொள்வேன். அடுத்த முறை அவர்கள் அழைக்கும்போது, "சொல்லுங்கள் முனுசாமி ஐயா... சொல்லுங்கள் ராமசாமி சார்... வணக்கம் சுமதி மேடம்..." என்று பெயர் சொல்லி அழைப்பேன். ஒரு மனிதரை அவரது பெயர் சொல்லி அழைப்பது, அவருக்கு நாம் அளிக்கும் மரியாதையின் வெளிப்பாடாகும். அந்த ஒரு வார்த்தை கூட அவர்களின் நம்பிக்கையை பல மடங்கு உயர்த்துகிறது. சிலர் உள்ளே வரும்போதே, "சார், நான் பேசும்போது நீங்கள் கோபப்படுவீர்கள் என்று நினைத்தேன்." என்று தயக்கத்துடன் கூறுவார்கள். ஆனால், உரையாடல் முடிந்து வெளியே செல்லும்போது, அதே முகத்தில் அமைதியும், நம்பிக்கையும், புன்னகையும் தெரியும். அதுவே என் பணிக்குக் கிடைக்கும் மிகப் பெரிய பாராட்டாக நான் கருதுகிறேன். மேலும், என்னை நாடி வரும் பல பிரச்சினைகளில் பெரும்பாலானவை சட்டப் பிரச்சினைகளைவிட, ஈகோ விட்டுக்கொடுக்க மனமில்லாமல் உருவாகும் மனப்பிரச்சினைகளாகவே இருப்பதை நான் உணர்ந்திருக்கிறேன். அத்தகைய நேரங்களில், இரு தரப்பினரையும் அமைதியாக அமர வைத்து, ஒருவர் மற்றவரின் கருத்தைக் கேட்கும் சூழலை உருவாக்க முயற்சிப்பேன்.

உரையாடலின் இடையே, சூழலுக்குப் பொருத்தமாக திருக்குறள்களின் கருத்துகளையும் எடுத்துக்கூறுவேன். குறிப்பாக, உண்மையுடனும் நேர்மையுடனும் பேசுவதின் அவசியத்தையும், மனிதன் பெறுவது அவனது முயற்சியோடு ஊழும் இணைந்ததே என்பதையும் விளக்கும் குறள்களைச் சுட்டிக்காட்டி, கோபத்தை விடுத்து பொறுமையுடனும் நல்லிணக்கத்துடனும் சிந்திக்குமாறு எடுத்துரைப்பேன். பல நேரங்களில், அவர்கள் தங்கள் பிடிவாதத்தை விட்டுவிட்டு, நீதியின் பக்கமும் நல்லிணக்கத்தின் பக்கமும் திரும்பி, சமாதானமாகப் செல்வதைப் பார்க்கும்போது, திருவள்ளுவரின் சிந்தனைகள் இன்றும் மனித மனங்களை வழிநடத்துகின்றன என்ற நம்பிக்கை மேலும் வலுப்பெறுகிறது.

அந்த ஒவ்வொரு தருணத்திலும், திருவள்ளுவர் கூறிய "இனிய உளவாக இன்னாத கூறல்" என்ற குறள் என் மனதில் மீண்டும் மீண்டும் ஒலிக்கிறது.

காவல்துறை என்பது சட்டத்தை மட்டும் நிலைநாட்டும் துறை அல்ல; மனிதநேயத்தையும் பாதுகாக்கும் துறையாக இருக்க வேண்டும். சட்டம் ஒழுங்கை உருவாக்கலாம்; ஆனால் இனிய சொற்களும் அன்பான அணுகுமுறையும் மனித மனங்களில் நம்பிக்கையை உருவாக்குகின்றன. பல நேரங்களில் கடுமையான நடவடிக்கைகளால் கூட செய்ய முடியாத மாற்றத்தை, ஒரு புன்னகையும் சில இனிய வார்த்தைகளும் ஏற்படுத்திவிடுகின்றன.

திருக்குறளைப் படிப்பது பெருமை. ஆனால், அதை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதுதான் உண்மையான பெருமை. அந்த உயர்ந்த நெறியை என் அன்றாடப் பணியிலும், என் வாழ்க்கையிலும் பின்பற்ற முயற்சி செய்து வருகிறேன். இனிய சொல் என்பது வெறும் பேச்சல்ல; அது மனிதநேயத்தின் முதல் படி. அந்த முதல் படியை ஒவ்வொருவரும் எடுத்து வைத்தால், மனித உறவுகள் மலரும்; மனிதநேயம் நிறைந்த சமுதாயம் உருவாகும்.

திருக்குறள் என் கையில் இருக்கும் ஒரு நூல் மட்டுமல்ல; என் மனதில் வாழும் வாழ்க்கை நெறி. என் பணியில் நான் பின்பற்ற முயலும் நடைமுறை வழிகாட்டி. ஒவ்வொரு நாளும் ஒரு மனிதரை இனிய சொல்லால் வரவேற்கும் ஒவ்வொரு தருணத்திலும், திருவள்ளுவர் இன்னும் நம்மோடு வாழ்கிறார் என்ற உணர்வு எனக்குள் புதிதாய் பிறக்கிறது. அறம் சார்ந்த ஒரு சமூகத்தை உருவாக்க அதிகார மையங்கள் மட்டும் போதாது ஒவ்வொரு தனிமனிதனும் தன்னுள் இருக்கும் குறள்நெறியை மீட்டெடுக்க வேண்டும் அதுவே உண்மையான மாற்றத்தை உருவாக்கும்.

– ஜெ.சங்கர் விக்கி

வேளாண்மை செழிக்க மழை நீர் மேலாண்மை!

–வெற்றிகரமாக வழிகாட்டும் விவசாயி அய்யப்பா மசாகி!

2014 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலேயே கர்நாடக விவசாயியான முனி நாகப்பாவுக்கு பயம் தோன்றிவிட்டது. தோட்டத்தில் பயிரிட்ட பழச்செடிகளுக்கு பாய்ச்ச 21 ஆழ்துளைக் கிணறுகளிலும் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லை. வேறு வழியின்றி காசு கொடுத்து நீர் வாங்கி வயலுக்கு பாய்ச்சவும் துணிந்துவிட்டார். அப்போதுதான் விவசாயிகள் மாநாட்டில் பங்கேற்றுவிட்டு வீடு திரும்பியிருந்த நாகப்பாவின் மகன், கூட்டத்தில் கூறிய நீர் சேகரிப்பு முறைகளை முயற்சிக்கலாம் என்றார்.

எப்படியாவது பயிர்களைக் காப்பாற்றினால் போதும் என்ற நிலையில் நாகப்பாவும் தலையாட்ட, 3 நாட்களில் நீர் சேகரிப்பு அமைப்புகள் விறுவிறுவென அவர் நிலத்தில் உருவாயின. சில மாதங்களிலேயே நீர் சேகரிப்பு குழிகளில் நிறைந்த மழை நீரினால் நாகப்பாவின் ஆழ்துளைக் கிணறுகள் நிறையத் தொடங்கின. ஏறத்தாழ 4 கிணறுகளில் நீர் தளும்ப நிறைந்திருப்பதைப் பார்த்ததும் நாகப்பா நெஞ்சு நெகிழ்ந்து நன்றி சொன்னது கர்நாடகாவின் தண்ணீர் டாக்டரான அய்யப்பா மசாகிக்கு!

நாகப்பா சின்ன உதாரணம்தான். இவரைப்போல கர்நாடகா மாநிலத்திலுள்ள ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு நீர் சேகரிப்பு திட்டங்களை வடிவமைத்துக் கொடுத்து, அவர்களின் வாழ்வை பசுமை செழிக்கச் செய்தவர் வேறு யாருமல்ல... அய்யப்பாதான். தனது நீர்சேகரிப்பு வடிவமைப்பு பணிகளுக்கான அங்கீகாரமாக 2014ம் ஆண்டு அசோகா விருது வென்ற அய்யப்பா, வடக்கு கர்நாடகாவின் கட்டாக் மாவட்டத்திலுள்ள வீரப்புரா கிராமத்தில் பிறந்தவர்.

''அம்மாவோடு நீர் பிடிக்க அதிகாலையில் 3 மணிக்கு எழுவதுதான் நீர்பிரச்னை பற்றி

நான் அறிய நேர்ந்த முதல் பதிவு. ஓர் ஆண்டு பெய்யும் மழையை சேமித்தால் 3 ஆண்டுகளுக்கு குடிநீர் பிரச்னையே இருக்காது...” என நம்பிக்கை பதிலால் ஆச்சரியப்படுத்துபவர் லார்சன் அண்ட் டூப்ரோவில் (பெங்களூரு) மெக்கானிகல் எஞ்சினியராக 23 ஆண்டுகள் பணியாற்றியவர். 2002ம் ஆண்டு தன் பணிக்கு விடை கொடுத்துவிட்டு இந்தியாவின் நீர் பற்றாக்குறைக்கான தீர்வுகளைத் தேடினார். 2005ம் ஆண்டு வாட்டர் லிட்ரசி பவுண்டேஷனை தொடங்கினார்.

மழைநீரைச் சேகரித்து சுத்திகரித்து, மண்ணில் சேமிப்பதுதான் இவரது ஃபார்முலா. “இன்றுள்ள விளைநிலங்கள் தட்டையாக இருப்பதால், மேலேயுள்ள மண்ணை மட்டும் மழைநீர் நனைத்துவிட்டு வழிந்தோடிவிடுகிறது...” என்று சொல்லும் அய்யப்பா இதற்கான தீர்வாக மழைநீர் சேகரிப்பு முறையினை விளக்குகிறார். ‘‘களிமண், மணல், மண், சரளைக்கல், பாறாங்கல் ஆகியவற்றை உள்ளடக்கமாகக் கொண்ட குழிகளை ஒரு ஏக்கருக்கு 8 என தோண்டிக்கொள்ள வேண்டும்.

அப்போதுதான் கடும் மழைவெள்ள நீரும் கூட வீணாகாமல் குழியிலுள்ள சரளைக்கல், மணல் வழியாக கீழேயுள்ள மண்ணைச் சென்றடைந்து மொத்த நிலத்தையும் பொன் விளையும் பூமியாக்கும். இதில் மழைநீர் ஏதேனும் ஒரு குழியில் இறங்கிவிடுவதால் நீர் தேவையின்றி வீணாகாது...” என்கிறார். மழைநீர் சேகரிப்புக் குழிகளை அமைக்க விரும்பும் விவசாயியின் நிலத்தை நன்குஆய்வு செய்தபின் தேவையான பொருட்களைப் பட்டியலிடும் அய்யப்பா, பட்ஜெட்டைப் பொறுத்து 100க்கும் மேற்பட்ட மழைநீர் சேகரிப்பு திட்டங்களை வடிவமைத்து தருகிறார்.‘‘மழைநீர் கிடைப்பது சுற்றுச்சூழலைப் பொறுத்ததுதான். ஆனால் கிடைக்கும் 1 இன்ச் மழையையும் முறையாகச் சேகரித்தால் இந்தியாவில் தண்ணீர் பிரச்னையே இருக்காது. எளிய நீர் சேகரிப்பு முறைகளைக் கடைப்பிடித்தால் 2050ம் ஆண்டு நீர்வளம் நிறைந்த தற்சார்பு நாடாக இந்தியா நிமிர்ந்து நிற்கும்!” என பூரிப்பாகிறார்.

2014ம் ஆண்டு ஆந்திராவிலுள்ள சிலாமாத்தூர் என்ற வறட்சிப் பகுதியில் தன் நண்பர்களோடு இணைந்து 84 ஏக்கர் தரிசு நிலத்தை வாங்கினார் அய்யப்பா மசாகி. ‘ஒரே ஆண்டில் நீர்வளமான பகுதியாக இதை மாற்றிக்காட்டு’ என்பது தோழர்களின் சவால். 25,000 நீர் சேகரிப்பு குழிகளையும் நான்கு ஏரிகளையும் அமைத்து பொன்விளையும் பூமியாக அதை மாற்றி சவாலில் அய்யப்பா வென்றார்.

ஐந்து சிறு கிணறுகள் மூலம் தேவைக்கு நீரெடுத்து பயன்படுத்தியவர், ஏரியின் மேல்மண்ணை எடுத்து நிலத்தின் ஒரு பகுதியில் 60% அடர்த்தியான மரங்களை வனமாக வளர்த்தார். 40% பழமரங்கள், கூடவே தானியங்கள், காய்கறிகளும் விளைவித்து வருவாயைப் பெருக்கினார்.

அடுத்து பால் பண்ணை அமைத்து முழுமையான தற்சார்பு இயற்கைப் பண்ணையாக மாற்றவிருக்கிறார். மாநிலத்தில் 4,200 இடங்களில் நீர் சேகரிப்பு திட்டங்கள், 600 ஏரிகள், 11 மாநிலங்களுக்கான சூழல் பாதுகாப்பு திட்டங்கள் தீட்டி லிம்கா சாதனையிலும் (2012) இடம்பிடித்திருக்கிறார்!

இவரோடு பேச: 094483 79497

இமெயில்:www.waterliteracy.tk

தகவல்: மன்னை அம்ரார பாண்டியன்

BEHIND EVERY EVENT THERE WAS A REASON!

According to Saiva Sidhdhantham the fact that the three fundamental tenets are Pathi (Lord Shiva),Pasu (His creations) and Pasam (Attachment) basics are conclusive facts. According to Thirumoolar,a poet and Saint the genesis of these three is indeterminable.The Lord didn't want to be alone and so created lives with obvious concomitant Pasam. Pasam is a curse on life. An extensive study about Pathi is essential.

The believers ascertain the existence of God who performs Creation, Protection and Destruction.The theologists prove the existence of God by the theory of Causality.Their logic is that when there is Universe filled with life of different forms and cu vegetation,then there must be a Creative whom Saivites call Shiva .Behind every event or occurrence,there has to be a specific reason. Events do not happen all of a sudden.This is causative phenomenon. What was then in a subtle and invisible state is now in visible physical state. Again it can go to invisible state.

The invisible state is of no use That is why God transformed it into visible state so as to facilitate creations. Hence Universe created by Shiva will not end and it will continue to be in some form.What doesn't exist cannot produced and what exists cannot be destroyed.

Everything that depends causality cannot be destroyed.Nothing is lost when a candle is burnt.We can light another candle with it. Similarly one can impart education to others. Similarly energy can neither be destroyed nor be created which is the principle of conservation of energy. One energy can be converted into another energy. For example a potter makes a pot from clay.



Here clay is the raw material.Similarly from gold metal a goldsmith makes ornaments.When a pot is broken it takes it's old form clay.When an ornament is melted, raw gold is back. Here clay and raw gold are causal matter and pot and ornaments are products. Subtle form and bulk form can be explained with an example.If we press oil seeds we get oil because oil is subtly hidden in it.Can we get oil if we crush sand.Here oil is in bulk form and it is in subtle form inside the seed.

- Prof.E.S.Jambulingam

காவல்துறை அலுவலர்களின் பொறுப்பு வரிசை



முதல் குழந்தை இரண்டாவது குழந்தை ஒப்பீடு ஏன்!
– உளவியல் சிந்தனை

"முதல் குழந்தை அமைதி, இரண்டாவது குழந்தை கலாட்டா!" – இதற்குப் பின்னால் இருக்கும் அறிவியல் என்ன?

ஆம், இது மிகவும் சுவாரஸ்யமான விஷயம். பல குடும்பங்களில் "முதல் குழந்தை ஒரு மாதிரி, இரண்டாவது குழந்தை முற்றிலும் வேறு மாதிரி!" என்று பெற்றோர் கூறுவதை கேட்கலாம். இதற்கு காரணம் பிறந்த வரிசை (Birth Order) மட்டுமல்ல; குழந்தை வளர்ந்த சூழல், பெற்றோரின் நடத்தை, சகோதரர்/சகோதரியின் தாக்கம், மற்றும் தனிப்பட்ட குணாதிசயங்கள் ஆகியவை சேர்ந்தே காரணமாகின்றன.

முதல் குழந்தை பிறக்கும் போது பெற்றோருக்கு எல்லாமே புதிய அனுபவம். அதனால் அவர்கள் மிகவும் கவனமாகவும், விதிமுறைகளுடன் வளர்க்கவும் முயற்சிப்பார்கள். இதன் விளைவாக முதல் குழந்தைகள் பொறுப்புணர்வு அதிகம் கொண்டவர்களாகவும், படிப்பில் அக்கறை உள்ளவர்களாகவும், தலைமைப் பண்புகள் உடையவர்களாகவும் காணப்படுகிறார்கள். வீட்டில் "சின்ன பெற்றோர்" போல தம்பி அல்லது தங்கையை கவனித்துக்கொள்ளும் பழக்கமும் உருவாகலாம்.

ஆனால் இரண்டாவது குழந்தை பிறக்கும் போது பெற்றோருக்கு அனுபவம் வந்திருக்கும். அவர்கள் கொஞ்சம் தளர்வாக இருப்பார்கள். மேலும், வீட்டில் ஏற்கனவே ஒரு பெரிய சகோதரர் அல்லது சகோதரி இருப்பதால், இரண்டாவது குழந்தை ஆரம்பத்திலிருந்தே போட்டி மற்றும் ஒப்பீட்டுச் சூழலில் வளர்கிறது. அதனால் அவர்கள் சமூகத்துடன் எளிதில் பழகுபவர்களாகவும், சாகச உணர்வு கொண்டவர்களாகவும், சில நேரங்களில் விதிமுறைகளை சவால் செய்பவர்களாகவும் இருக்கலாம்.

ஒரு சுவாரஸ்யமான உண்மை என்னவென்றால், ஒரே பெற்றோர், ஒரே வீடு, ஒரே உணவு இருந்தாலும் இரண்டு குழந்தைகள் முற்றிலும் வேறுபட்டவர்களாக வளரலாம். காரணம், அவர்கள் அனுபவிக்கும் "குடும்ப உலகம்" ஒன்றல்ல. முதல் குழந்தை சில ஆண்டுகள் பெற்றோரின் முழு கவனத்தையும் தனியாக பெற்றிருக்கும். ஆனால் இரண்டாவது குழந்தை பிறந்த நாளிலிருந்தே அண்ணன் அல்லது அக்காவுடன் கவனத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டியிருக்கும்.

உளவியல் அறிஞர் Alfred Adler பிறந்த வரிசை ஒரு நபரின் குணநலன்களை பாதிக்கலாம் என்று கூறியிருந்தார். இருப்பினும் நவீன ஆய்வுகள், பிறந்த வரிசை மட்டும் குணத்தை தீர்மானிக்காது; மரபியல் (genes), நண்பர்கள், பள்ளி, வாழ்க்கை அனுபவங்கள் போன்றவை மிகப் பெரிய பங்கு வகிக்கின்றன என்று காட்டுகின்றன.

இன்னும் ஒரு அழகான உண்மை என்னவென்றால், ஒரே வீட்டில் வளர்ந்தாலும் ஒவ்வொரு குழந்தையும் தனது சொந்த "இடத்தை" குடும்பத்தில் உருவாக்க முயற்சிக்கிறது. முதல் குழந்தை "பொறுப்பானவன்" என்றால், இரண்டாவது குழந்தை "கலாட்டா செய்பவன்" ஆக இருக்கலாம். முதல் குழந்தை அமைதியானவள் என்றால், இரண்டாவது குழந்தை அதிகம் பேசுபவளாக இருக்கலாம். இது குடும்பத்தில் தன்னை தனித்துவமாக காட்டிக்கொள்ள மூளை இயற்கையாக தேர்ந்தெடுக்கும் ஒரு வழியாகக் கருதப்படுகிறது.

அதனால் "முதல் குழந்தை இப்படித்தான், இரண்டாவது குழந்தை அப்படித்தான்" என்பது ஒரு கட்டாய விதி அல்ல. ஆனால் குடும்பத்தில் ஒவ்வொரு குழந்தையும் வெவ்வேறு அனுபவங்களைப் பெறுவதால், அவர்களின் குணநலன்களிலும் சுவாரஸ்யமான வேறுபாடுகள் தோன்றுவது இயல்பானது. குடும்பம் ஒரே மாதிரி இருந்தாலும், ஒவ்வொரு குழந்தையும் தனக்கென ஒரு தனி உலகத்தில் வளர்கிறது என்பதே இதன் மிகப் பெரிய ஆச்சரியமான உண்மை!

உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் ஒவ்வாமை!

சிலருக்கு நிலக்கடலை, இறால், முட்டை, சில மருந்துகள், தேனீ அல்லது குளவி கொட்டுதல் போன்றவற்றால் திடீரென மிகவும் கடுமையான ஒவ்வாமை ஏற்படலாம். இந்த மிகக் கடுமையான ஒவ்வாமை எதிர்வினைக்கே அனாபைலக்சிஸ் (Anaphylaxis) என்று பெயர். சாதாரண ஒவ்வாமையில் தோலில் அரிப்பு அல்லது தும்மல் மட்டுமே இருக்கும். ஆனால் அனாபைலக்சிஸில் சில நிமிடங்களுக்குள் மூச்சுத்திணறல், முகம் மற்றும் நாக்கு வீக்கம், இரத்த அழுத்தம் திடீரென குறைதல் போன்ற ஆபத்தான நிலைகள் ஏற்படலாம்.

நமது உடலின் நோய் எதிர்ப்பு அமைப்பு சில நேரங்களில் ஒரு தீங்கற்ற பொருளை கூட "பெரிய எதிரி" என்று தவறாக அடையாளம் காண்கிறது. இதனால் மாஸ்ட் செல்கள் (Mast Cells) என்ற செல்கள் ஹிஸ்டமின் (Histamine) போன்ற வேதிப்பொருட்களை அதிக அளவில் வெளியிடுகின்றன. இதன் விளைவாக இரத்தக் குழாய்கள் விரிவடைந்து, இரத்த அழுத்தம் குறைகிறது; சுவாசக் குழாய்கள் சுருங்கி மூச்சுவிட சிரமம் ஏற்படுகிறது. இதுவே அனாபைலக்சிஸின் முக்கிய காரணமாகும்.

அனாபைலக்சிஸின் அறிகுறிகள் திடீரென ஆரம்பிக்கும். உடல் முழுவதும் அரிப்பு, சிவப்பு தடிப்புகள், உதடு மற்றும் கண் இமைகள் வீங்குதல், தொண்டை இறுக்கமாக இருப்பது போன்ற உணர்வு, மூச்சுத்திணறல், தலைச்சுற்றல், வாந்தி, மயக்கம் போன்றவை ஏற்படலாம். சில நேரங்களில் முதல் அறிகுறி நேரடியாக மயக்கமாகவே இருக்கலாம். அதனால் இதை சாதாரண ஒவ்வாமை என்று அலட்சியப்படுத்தக் கூடாது.

ஒரு சுவாரஸ்யமான உண்மை என்னவென்றால், ஒரு நபர் பல ஆண்டுகளாக எந்தப் பிரச்சனையும் இல்லாமல் சாப்பிட்டு வந்த உணவுக்கே திடீரென ஒரு நாள் கடுமையான ஒவ்வாமை ஏற்படலாம். அதேபோல் ஒரு தேனீ கொட்டுதலை முன்பு எளிதாகத் தாங்கியவர், அடுத்த முறை கொட்டும்போது அனாபைலக்சிஸால் பாதிக்கப்படவும் வாய்ப்புள்ளது. காரணம், உடலின் நோய் எதிர்ப்பு அமைப்பு முந்தைய சந்திப்பை "நினைவில்" வைத்துக்கொண்டு மிகைப்படுத்தப்பட்ட பதிலை அளிக்கிறது.

அனாபைலக்சிஸுக்கு மிக முக்கியமான முதலுதவி

அட்ரினலின் (Epinephrine) ஊசி ஆகும். இது இரத்த அழுத்தத்தை உயர்த்தவும், சுவாசக் குழாய்களை திறக்கவும் உதவுகிறது. மருத்துவ உதவி கிடைக்கும் வரை காத்திருக்காமல் உடனடியாக சிகிச்சை பெறுவது மிகவும் அவசியம். "சில நிமிடங்கள் காத்திருந்து பார்ப்போம்" என்ற எண்ணமே ஆபத்தாக மாறக்கூடும்.

மிகவும் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், நம்மை கிருமிகளிலிருந்து காப்பாற்றும் அதே நோய் எதிர்ப்பு அமைப்புதான் சில நேரங்களில் அளவுக்கு மீறி செயல்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையை உருவாக்குகிறது. அதாவது, உடலைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட பாதுகாப்புப் படை, தவறான அலாரம் காரணமாக தன்னுடைய உடலையே ஆபத்தில் ஆழ்த்துவது போல அனாபைலக்சிஸ் நிகழ்கிறது. அதனால்தான் மருத்துவ உலகில் இது ஒரு உண்மையான அவசரநிலையாகக் கருதப்படுகிறது.

நான் குறிப்பிட்டது போன்ற அறிகுறிகள் இருந்தால்..உடனே மருத்துவமனை செல்லவேண்டும்... அலட்சியப்படுத்த கூடாது...

பிறர் கதையை பேசுவதில் சிலருக்கு பேரின்பம் வருவது ஏன்!

“**நா**ன் Gossip பேச மாட்டேன்” என்று சொல்பவர்கள்கூட, யாரையாவது பற்றிய ஒரு புதிய தகவல் கிடைத்தால் ஆர்வமாக கேட்பார்கள். இது கெட்ட பழக்கம் என்பதற்காக மட்டுமல்ல; மனித மூளையின் இயல்புடன் தொடர்புடைய ஒரு விஷயம்.

பழங்காலத்தில் மனிதர்கள் சிறிய குழுக்களாக வாழ்ந்தனர். அப்போது யார் நம்பகமானவர், யார் ஏமாற்றக்கூடியவர், யார் நல்லவர், யார் ஆபத்தானவர் போன்ற தகவல்கள் உயிர் பிழைப்பதற்கு முக்கியமாக இருந்தன. அதனால் மற்றவர்களைப் பற்றிய தகவல்களை பகிர்ந்து கொள்வது ஒரு சமூக திறனாக மாறியது. இன்று அதுவே Gossip என்ற வடிவத்தில் தொடர்கிறது.

மற்றவர்களின் வாழ்க்கையைப் பற்றி கேட்கும்போது, நம்முடைய மூளை அதை ஒரு கதையாக பார்க்கிறது. மனிதர்களுக்கு இயற்கையாகவே கதைகள் பிடிக்கும். ஒரு காதல், ஒரு சண்டை, ஒரு வெற்றி, ஒரு தோல்வி — இவை எல்லாம் மூளையின் கவனத்தை ஈர்க்கும். அதனால்தான் ஒரு சாதாரண தகவலை விட, ஒரு மனிதரைப் பற்றிய தகவல் நமக்கு அதிக ஆர்வத்தை ஏற்படுத்துகிறது.

Gossip மற்றொரு காரணத்திற்காகவும் மக்களுக்கு பிடிக்கும். அது ஒரு குழுவில் சேர்ந்திருக்கும் உணர்வை கொடுக்கிறது. நண்பர்கள் ஒன்றாக அமர்ந்து யாரையாவது பற்றி பேசும்போது, அவர்கள் ஒருவருடன் ஒருவர் நெருக்கமாக இருப்பது போன்ற உணர்வு உருவாகிறது. இதனால் சமூக உறவுகள் வலுப்பெறுகின்றன. அதனால்தான் அலுவலகம், கல்லூரி, குடும்பம், நண்பர்கள் வட்டம் என எங்கு மனிதர்கள் இருக்கிறார்களோ அங்கு Gossipமும் இருக்கும்.

ஆனால் Gossipக்கு இரண்டு முகங்கள் இருக்கின்றன. சில நேரங்களில் அது வெறும் தகவல் பரிமாற்றமாக இருக்கும். ஆனால் சில நேரங்களில் அது ஒருவரின் மனதை காயப்படுத்தும் ஆயுதமாக மாறிவிடும். உண்மை தெரியாமல் பேசப்படும் ஒரு வார்த்தை கூட ஒருவரின் பெயரையும் நிம்மதியையும் பாதிக்கலாம்.

ஒரு சுவாரஸ்யமான உண்மை என்னவென்றால், பல ஆய்வுகள் மனிதர்கள் பெரும்பாலும் பிரபலங்களைப் பற்றிய Gossipஐ விட, தங்களுக்கு தெரிந்தவர்களைப் பற்றிய Gossipஇல்தான் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள் என்று கூறுகின்றன. ஏனெனில் நமக்கு தொடர்பில்லாத கதைகளை விட, நம் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட மனிதர்களின் கதைகள் மூளைக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக தோன்றுகின்றன.

எனவே Gossip என்பது மனிதர்களின் இயற்கையான சமூக நடத்தைகளில் ஒன்று. ஆனால் நாம் பேசும் தகவல் உண்மையா, அது யாரையும் காயப்படுத்துமா, அதை நேரில் அந்த நபரிடம் சொல்ல முடியுமா என்று ஒரு நிமிடம் யோசித்துப் பேசினால், Gossip ஒரு பிரச்சனையாக இல்லாமல் ஒரு பொறுப்பான உரையாடலாக மாறலாம்.

அமைதியாக இருப்பவர்களின் மனநிலை என்ன?

அதிகமாக பேசாதவர்கள், எல்லா விஷயங்களுக்கும் உடனே பதில் சொல்லாதவர்கள், தங்களுடைய உணர்வுகளை வெளிப்படையாக காட்டாதவர்கள் - இவர்களைப் பார்த்து பலர் "இவர்களுக்கு எதுவுமே தோன்றாது போல" என்று நினைப்பார்கள். ஆனால் உண்மை அதற்கு நேர்மாறாக இருக்கலாம். பல நேரங்களில் அதிகம் பேசாதவர்கள்தான் அதிகமாக சிந்திப்பவர்களாக இருப்பார்கள்.

அமைதியாக இருப்பது எப்போதும் பலவீனத்தின் அடையாளம் அல்ல. சிலருக்கு அது அவர்களின் இயல்பான குணம். அவர்கள் பேசுவதை விட கவனிப்பதை விரும்புவார்கள். மற்றவர்கள் பேசும் வார்த்தைகள், முகபாவனைகள், உணர்வுகள் போன்றவற்றை அமைதியாக கவனித்து கொண்டிருப்பார்கள். அவர்கள் பேசுவதற்கு முன் யோசிப்பார்கள்; அதனால் அவர்கள் குறைவாக பேசுகிறார்கள் என்று தோன்றும்.

பல அமைதியான மனிதர்களின் மனதில் வெளியில் தெரியாத ஒரு உலகம் இருக்கும். அவர்கள் கனவுகள் காண்பார்கள், ஆழமாக சிந்திப்பார்கள், சிறிய விஷயங்களைக்கூட மனதில் வைத்துக்கொள்வார்கள். வெளியில் அமைதியாக இருந்தாலும், உள்ளே ஆயிரம் எண்ணங்கள் ஓடிக்கொண்டிருக்கலாம். சில நேரங்களில் அவர்கள் சொல்வதை விட உணர்வது அதிகமாக இருக்கும்.

சிலர் வாழ்க்கையில் ஏற்பட்ட காயங்கள் காரணமாகவும் அமைதியாக மாறுகிறார்கள். பலமுறை புரிந்துகொள்ளப்படாத அனுபவங்கள், ஏமாற்றங்கள், இழப்புகள் அல்லது மனவேதனைகள் அவர்களை குறைவாக பேச வைக்கலாம். அவர்கள் மனிதர்களை வெறுப்பதில்லை; ஆனால் யாரிடமும் எளிதில் மனதை திறக்க தயங்குவார்கள். ஏனெனில் ஒருமுறை உடைந்த நம்பிக்கை மீண்டும் உருவாக நேரம் எடுக்கும். ஒரு சுவாரஸ்யமான உண்மை என்னவென்றால், அமைதியாக இருப்பவர்கள் பெரும்பாலும் மற்றவர்களின் உணர்வுகளை நன்றாக புரிந்துகொள்வார்கள். அவர்கள் அதிகம் கேட்பார்கள், குறைவாக பேசுவார்கள். அதனால் மற்றவர்கள் கவனிக்காத பல விஷயங்களை அவர்கள் கவனித்து விடுவார்கள். சில நேரங்களில் ஒரு வார்த்தையும் பேசாமல், ஒருவரின் மனநிலையை புரிந்து கொள்ளக்கூடியவர்களாக இருப்பார்கள்.

ஆனால் அமைதியை தனிமையுடன் குழப்பக்கூடாது. அமைதியாக இருப்பவர்கள் அனைவரும் சோகமாக இருக்க வேண்டிய அவசியமில்லை. பலர் தங்களுடைய அமைதியில் மகிழ்ச்சியாக இருப்பார்கள். அவர்களுக்கு கூட்டத்தை விட அமைதி பிடிக்கும். பேசுவதை விட கேட்பது பிடிக்கும். வெளிப்பாட்டை விட சிந்தனை பிடிக்கும்.

அதனால் அடுத்த முறை அமைதியாக இருக்கும் ஒருவரை பார்த்தால், "அவர் எதுவும் யோசிக்கவில்லை" என்று நினைக்காதீர்கள். சில நேரங்களில் அதிகம் பேசுபவர்களின் மனதை விட, அமைதியாக இருப்பவர்களின் மனதில் தான் மிகப்பெரிய கதைகள் எழுதப்பட்டுக் கொண்டிருக்கும்.

அவர்கள் நினைத்தால் முதலமைச்சரும் ஆவார்கள்.

அமைதியை என்றும் குறைத்து மதிப்பிடாதீர்கள்..

பொள்ளாட்சி முத்துராஜ்

இளம் வயதிலேயே ஏன் முடி நரைக்கிறது?

பொதுவாக முடிக்கு கருப்பு நிறம் தருவது மெலனின் (Melanin) என்ற நிறமி. இதை முடி வேரில் இருக்கும் மெலனோசைட் (Melanocyte) என்ற சிறப்பு செல்கள் உற்பத்தி செய்கின்றன. இந்த செல்கள் போதுமான அளவு மெலனின் தயாரிக்காதபோது, புதியதாக வளரும் முடி சாம்பல் அல்லது வெள்ளை நிறத்தில் தோன்றத் தொடங்கும். வயது அதிகரிக்கும்போது இது இயல்பாக நடக்கும். ஆனால் சிலருக்கு 20–30 வயதிலேயே முடி நரைக்க ஆரம்பிக்கலாம்.

இளம் வயதில் முடி நரைக்கும் முக்கிய காரணம் பரம்பரை (Genetics) ஆகும். பெற்றோர் அல்லது தாத்தாபாட்டிக்கு இளம் வயதிலேயே நரை வந்திருந்தால், அதே தன்மை குழந்தைகளிடமும் தோன்றலாம். இது நோய் அல்ல; உடலின் மரபணு அமைப்புடன் தொடர்புடையது. அதனால்தான் ஒரே வயதுடைய இருவரில் ஒருவருக்கு நரை அதிகமாகவும் மற்றொருவருக்கு இல்லாமலும் இருக்கலாம்.

மேலும், வைட்டமின் B12, இரும்புச்சத்து, துத்தநாகம் (Zinc), செம்பு (Copper) போன்ற சத்துக்கள் குறைவாக இருந்தாலும் நரை விரைவில் தோன்றலாம். உடலில் இந்த சத்துக்கள் குறைந்தால் முடி வேரின் செயல்பாடு பாதிக்கப்பட்டு மெலனின் உற்பத்தி குறையலாம். அதேபோல் தைராய்டு சுரப்பி கோளாறுகள், சில தன்னைத்தானே தாக்கும் நோய்கள் (Autoimmune diseases), நீண்டகால உடல்நலப் பிரச்சனைகளும் காரணமாக இருக்கலாம்.

மனஅழுத்தம் மற்றும் தூக்கமின்மையும் ஒரு பங்கு வகிக்கின்றன. "ஒரே இரவில் முடி நரைத்துவிடும்" என்பது உண்மை அல்ல. ஆனால் நீண்டகால மனஅழுத்தம் உடலில் ஆக்ஸிடேட்டிவ் ஸ்டிரெஸ் (Oxidative stress) எனப்படும் செல்சேதத்தை அதிகரித்து, மெலனோசைட்களின் செயல்பாட்டை பாதிக்கலாம். புகைப்பிடித்தலும் நரை வருவதை வேகப்படுத்தும் என்று பல ஆய்வுகள் கூறுகின்றன.

பரம்பரையால் வரும் நரையை முழுமையாகத் தடுக்க முடியாது. ஆனால் சில விஷயங்களை கவனிப்பதன் மூலம் நரை வேகமாக அதிகரிப்பதை குறைக்கலாம். தினசரி உணவில் கீரைகள், பருப்பு வகைகள், முட்டை, மீன், பால், பழங்கள், நட்ஸ் போன்ற சத்தான உணவுகளை சேர்க்க வேண்டும். போதுமான தூக்கம், உடற்பயிற்சி மற்றும் மனஅழுத்த கட்டுப்பாடும் முக்கியம். புகைப்பிடிப்பதைத் தவிர்ப்பது முடிக்கும் உடல்நலத்திற்கும் நல்லது. இளம் வயதிலேயே திடீரென அதிக அளவில் நரை தோன்றினால், மருத்துவரின் ஆலோசனையுடன் ரத்தப் பரிசோதனைகள் (Vitamin B12, Iron, Ferritin, Thyroid tests) செய்து பார்க்கலாம். சிலருக்கு சத்துக்குறைபாடு சரிசெய்யப்பட்ட பிறகு மேலும் நரை அதிகரிக்கும் வேகம் குறையலாம்.

ஒரு முடி வெள்ளையாக மாறிய பிறகு, அதை பிடுங்கினால் அதே இடத்தில் மீண்டும் கருப்பு முடி வளரும் என்பது ஒரு தவறான நம்பிக்கை. புதிய முடி வளரும்போதும் அதே முடி வேரிலிருந்து வளர்வதால், அந்த வேரில் மெலனின் உற்பத்தி குறைந்திருந்தால் மீண்டும் நரைத்த முடிதான் வளரும். அதனால் நரையை மறைக்க முடியை பிடுங்குவது தீர்வல்ல; அதன் காரணத்தைப் புரிந்துகொண்டு உடல்நலத்தை பராமரிப்பதே சிறந்த வழியாகும்.

ரணகள்ளி இலையில் உள்ள மருத்துவ குணங்கள்!

என்னப்பா... இன்னைக்கு இருக்குற அவசர உலகத்துல, தண்ணி சரியா குடிக்காததுனாலயும், கண்ட உணவுகளை சாப்பிடுறதுனாலயும் நிறைய பேருக்கு வர்ற முதல் பிரச்சனை இந்த 'கிட்னி ஸ்டோன்' (Kidney Stone) தான்.

டாக்டர்கிட்ட போனா, "கல் பெருசா இருக்கு, லேசர் பண்ணனும் இல்ல ஆபரேஷன் பண்ணனும்"னு லட்சக்கணக்குல செலவு சொல்றாங்க. ஆனா, நம்ம முன்னோர்கள் சொன்ன ஒரு செடி இப்போ சோஷியல் மீடியால செம வைரல்... அதுதான் ரணகள்ளி!

நம்ம ஊருல "ரணகள்ளி இலையை சாப்பிட்டா கல் அப்படியே கரைஞ்சு வந்துடும்"னு சொல்றாங்க. ஆனா இப்போ இருக்குற மாடர்ன் மெடிசின் ஒரு முக்கியமான கேள்வி கேக்குது:

"வயித்துல இருக்குற ஒரு கல்லை, வெறும் இலையைச் சாப்பிட்டு எப்படிக் கரைக்க முடியும்? அதுக்குள்ள இருக்குற கெமிக்கல் காம்போசிஷன் என்ன?" ஆயுர்வேதம் மற்றும் சித்த மருத்துவத்துல இதுக்கு *'பாஷாண பேதி'*னு பேரு. அப்படின்னா 'பாறையையும் பிளப்பவர்'னு அர்த்தம்.

இயற்கை டையூரிடிக் (Diuretic): இந்த இலையைச் சாப்பிடும்போது சிறுநீர் அதிகமா பிரியும். இதனால சின்னச் சின்ன கற்கள் அழுத்தம் காரணமா வெளியேற வாய்ப்பு இருக்கு.

அழற்சி எதிர்ப்பு: கிட்னியில் இருக்குற வீக்கத்தைக் குறைக்கும் தன்மை இதுக்கு உண்டு.

ஒரு சின்ன எச்சரிக்கை!

"நாட்டு மருந்துதானே... எவ்வளவு வேணா சாப்பிடலாம்"னு நினைக்காதீங்க.

அளவு முக்கியம்: ஒரு நாளைக்கு ஒரு இலை (அதிகாலையில் வெறும் வயிற்றில்) என்பதுதான் பொதுவான கணக்கு.

மருத்துவர் ஆலோசனை: கல் ரொம்ப பெருசா இருந்தாலோ இல்ல வேற ஏதும் பாதிப்பு இருந்தாலோ, கண்டிப்பா ஒரு சித்த மருத்துவர் அல்லது உங்க ரெகுலர் டாக்டர்கிட்ட கேட்டுட்டு இதைப் பண்றதுதான் புத்திசாலித்தனம்.

பொறுப்பும் கடமையும்

நாம் பிள்ளையிடம் மரியாதையாகப் பேசினால் அவர்களும் அதையே பின்பற்றுவர். தாயும் தந்தையும் ஒழுக்கமாக வாழ்ந்தால் பிள்ளைகளும் ஒழுக்கமாகவே வாழ்வர்.அழுக்கில்லாத ஒழுக்கம் வேண்டும். நல்லது சொல்லி வளருங்கள். அரிச்சந்திரனின் கதையைக் கேட்டதால் காந்தி மகாத்மாவாக மாறினார். அறவாழ்க்கையில் பெற்றோர் வாழ வேண்டும். நல்ல கதைப்புத்தகங்களை வாங்கிப் பரிசளியுங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு! நாமும் நல்ல புத்தகங்களைப் படிக்க வேண்டும். நம்மைப் பார்த்து அவர்களும் படிப்பார்கள்.படிப்பு ஒன்றே ஒரு மனிதனுக்கு ஆயுதம் என உணர வையுங்கள்.கடைகளுக்குக் குழந்தைகளை அனுப்புங்கள். காசின் அருமை அவர்களுக்குப் புரியும். மாதாமாதம் குடும்பத்துக்குத் தேவையான பொருட்களின் பட்டியலைப் பிள்ளைகள் தயாரிக்கட்டும். குடும்பத்தில் பிள்ளைகளும் ஓர் அங்கமல்லவா? சின்னச் சின்ன வேலைகளை அவர்களும் செய்து பழகட்டும். விருந்தாளி வந்தால் தண்ணீர் கொடுக்கச் சொல்லுங்கள். வந்தாரை வரவேற்கக் கற்றுக் கொடுங்கள்.

★★★

இரவு ஒன்பதரை மணிக்கெல்லாம் படுக்கப் பழக்குங்கள். காலை ஆறு மணிக்கு எழுப்பிவிடுங்கள். வகுப்புக்கு ஏற்றபடி எழுப்புவதை மாற்றி அமையுங்கள். பல் தேய்க்கப் பழக்குங்கள். முகம் கழுவி பெண்ணாய் இருந்தால் பொட்டும் ஆணாய் இருந்தால் திருநீறும் வைக்கக் கட்டளை இடுங்கள்.

படிக்கவேண்டும் என அமர வையுங்கள். ஒரு மணி நேரமாவது படிக்கச் செய்யுங்கள். பாட நூல்களை ஒழுங்காகப் பையில் அடுக்கக் கற்றுத்தாருங்கள்.தேவையற்றது ஏதாவது பையில் உள்ளதா எனப் பாருங்கள். பார்க்கவோ கேட்கவோ நேரம் இல்லை எனச் சொல்லாதீர்கள். அன்றன்று கற்பித்த பாடங்களைப் படிக்க வையுங்கள். உங்கள் வீட்டிலேயே படிக்க வேண்டும்.

★★★

மாலை நேரம் தெருப் பிள்ளைகளோடு உங்கள் குழந்தையும் விளையாடட்டும். கண்காணியுங்கள். ஆறு மணிக்கு வீட்டுக்கு வந்துவிட வேண்டும். பையைக் கொண்டுவந்து வீசிவிடக் கூடாது என அறிவுறுத்துங்கள். சீருடையைக் களைந்து தோய்க்கப் போடச் சொல்லுங்கள். கொண்டு சென்ற பாடப்புத்தகங்கள், குறிப்பேடுகள், வாய்ப்பாடுகள் ஆகிய அனைத்தும் இருக்கிறதா எனப் பார்க்கச் சொல்லுங்கள். வீட்டுப் பாடங்களை முடிக்கச் சொல்லுங்கள். ஏழு மணி முதல் படிக்கச் சொல்லுங்கள்.

எட்டரை மணிக்கு உணவு தயாரித்து அளியுங்கள். தனக்குரிய பாய் தலையணையைக் கொண்டுவந்து போடச்சொல்லுங்கள். ஒன்பதரைக்குப் படுக்கச் சொல்லுங்கள். படுக்குமுன் பல் தேய்க்கச் சொல்லுங்கள். சித்த மருத்துவக் கடைகளில் கிடைக்கும் பற்பொடியைப் பயன்படுத்த வையுங்கள். கருவப்பட்டைப் பற்பொடி நல்லதே! இப்படி ஒன்றிரண்டு மாதங்கள் செய்து விட்டால் அதுவே பழக்கமாகும். வழக்கமாகும்.

சனி, ஞாயிறுகளில் ஒரு மணி நேரம் அலைபேசியில் விளையாடட்டும். தொலைக்காட்சி பார்க்கட்டும். அவர்களை ஓர் அறையில் படிக்கச் சொல்லிவிட்டு நீங்கள்மட்டும் தொலைக்காட்சி பார்க்காதீர்கள். நீங்கள் தியாகம் செய்தால்தான் அவர்களின் எதிர்காலம் வளமாகும். பெண்பிள்ளைகளை இன்னும் கவனமாகப் பார்த்து வளர்க்க வேண்டும்.

★★★

பெண் பிள்ளைகள் மீது தந்தையே அதிகமாய்ப் பாசம் காட்டுவர். தவறில்லை. வளரும் பொழுதும்

வளர்ந்த பின்னும் அவர்களிடத்தில் அதிக கவனம் காட்டுங்கள். எல்லாம் தெரிந்து கொள்ளட்டும்!

வேலைக்கும் செல்லட்டும்! ஆண் நண்பர்களைத் தவிர்க்கச் சொல்லுங்கள்! எந்த வயதிலும் ஆண்களோடு அவர்கள் பழக வேண்டாம். அலைபேசியிலும் பேச வேண்டாம். அதிகமான கெடுபிடிகள் வேண்டாம்.

அதிகமான சுதந்தரமும் வேண்டாம். திருமணம் நடக்கும்வரை சற்றே கவனமாக இருக்கச் செய்யுங்கள். திரைப்படங்கள் பார்க்கலாம். அதற்கு அடிமையாகக்கூடாது. பெண் என்பவள் நெருப்பாக இருக்க வேண்டும். அதுவே அவர்களுக்குப் பாதுகாப்பு. இருபத்தைந்து வயதுக்கும் முப்பது வயதுக்கும் இடைப்பட்ட காலத்தில் திருமணம் செய்திடுங்கள். திருமணத்தால் உறவுகள் பலப்பட வேண்டும். பெண்பிள்ளைகளின் சம்பாத்தியத்தில் பெற்றோர் வாழ்தல் கூடாது.

சம்பாதிக்கும் பெண்கள் தம் மாத ஊதியத்தைத் தந்தையிடம் தர வேண்டும். அதுவே நல்லது. தானே சேர்த்து வைக்க அனுமதிக்காதீர்.

★★★

ஆண் பிள்ளைகளிடம் அதிகக் கவனம் செலுத்தவும். பெண் தோழிகள் தொடர்பு வேண்டாம் என வலியுறுத்துங்கள். நல்ல நண்பர்களோடு சேர்கிறார்களா எனப் பாருங்கள். குடும்ப வேலைகளில் ஆர்வத்தை உண்டாக்குங்கள். மளிகை சாமான்கள் வாங்குதல், அரிசி வாங்குதல், மருந்து வாங்குதல்,



எரிவாயு உருளைகள் வாங்குதல், வங்கிகளுக்குப் போய் வருதல், இல்லத்தைச் சுத்தமாய்ப் பராமரித்தல், விருந்தினர் வந்தால் வரவேற்றல், துணி துவைத்தல், தன்னடக்கமாய் இருத்தல், சின்னச் சின்ன வேலைகளைக் கற்றல் ஆகிய வேலைகளில் பயிற்சி கொடுங்கள்.

வேலைக்குச் சென்றால் குடும்பப் பணிகளைச் செய்ய வையுங்கள். பெற்ற தாயையும் தந்தையையும் கவனிக்கச் சொல்லுங்கள். திருமணம் போன்ற நிகழ்வுகளுக்கு அவர்கள் போய் வரட்டும். பல் வேறு துறையில் அவர்கட்குப் பயிற்சி தர வேண்டும். இரு சக்கர வண்டி வாங்கித் தரலாம். வேலைக்குப் போன பின்னர் வாங்கிக் கொள்ளலாம் எனக் கூறுங்கள். வாங்கிக் கொடுங்கள். தாறுமாறாக ஓட்டக் கூடாது என அறிவுறுத்துங்கள்.

★★★

பெண் பிள்ளைகளுக்குச் சமையலில் பயிற்சி தர வேண்டும். வேலைக்குச் செல்லும் பெண்ணாக இருந்தால் விடுமுறை நாட்களில் சமைப்பதற்குச் சொல்லித்தர வேண்டும். குடும்ப விளக்கு என்ற நூலை (பாரதிதாசன் எழுதியது) வாங்கிக் கொடுங்கள். ஒரு பெண்மணி எப்படி இருக்கவேண்டும் என்பதை அந்நூல் காட்டுகிறது. சமையல் செய்யக் கற்பதுடன் தையல் தைக்கவும் பழக்குங்கள். சுற்றுலா அழைத்துச் செல்லுங்கள்.

மிதி வண்டி, ஈருருளை, மகிழுந்து ஆகியவற்றை ஓட்டிப் பழக வையுங்கள். இளவயதிலேயே தற்காப்புக்கலை ஒன்றைக் கற்கச் செய்யுங்கள். தன்னம்பிக்கையும் எதையும் எதிர்கொள்ளும் திறமையும் எதையும் சமாளிக்கும் திறமையும் தன் காலில் நிற்கப் பழகும் திறமையும் அவர்களுக்கு

வரவேண்டும். வேலைக்குப் போகட்டும்! வேலை கொடுத்தும் வாழட்டும். ஆனால் பணிவு வேண்டும். இனிய சொற்களைப் பேச வேண்டும்.

மற்றவரை நம்பி வாழக்கூடாது. நம்பிக்கை இழந்தும் போகக் கூடாது. ஒரு நாள் நிலைமை மாறும் என்ற நம்பிக்கை வைத்து வாழச் செய்யுங்கள். கடவுளை வணங்கப் பழக்குங்கள். அறிவு பெரிதாக இருப்பினும் ஆணவம் கூடாது எனச் சொல்லுங்கள். பிள்ளையையும் பெண்ணையும் ஒப்பீடு செய்யாதீர்கள். அன்பு, பணிவு, துணிவு, அறிவு, தெளிவு, ஒழுங்கு போன்ற குணங்கள் இருத்தல் வேண்டும். பொதுவாகத்தான் சொல்கிறேன். புரிந்து கொண்டால் வாழ்க்கை புனிதமாகும்.

★★★

தவறிழைத்துவிட்டால் தாமாக முன்வந்து ஒப்புக் கொள்ளும் பக்குவம் ஆண், பெண் இரு சாரார்க்கும் பொதுவானது. வஞ்சனை, கீழறுப்பு, கோள் சொல்லுதல், பொய் உரைத்தல், ஏமாற்றுதல், நம்ப வைத்துக் கழுத்தறுத்தல், நாடகமாடுதல் ஆகிய கெட்ட குணங்களை இரு சாராரும் போக்கிட வேண்டும். பிடிவாத குணம் இருத்தல் நல்லதில்லை.

மூத்தோர் சொல் வார்த்தைகளைக் கேட்டு ஒழுகக் கற்றுத் தாருங்கள். பொறாமைக் குணம் இல்லாமல் வாழக் கற்றுக் கொடுங்கள். மற்றவரின் பெருமைகளைப் பேசலாம் என அறிவுறுத்துங்கள். சிறுமைகளைப் பேசாமல் இருக்கப் பழக்குங்கள். இதெல்லாம் ஒரே நாளில் வந்துவிடாது. காலப் போக்கில் வர வேண்டிய நற்குணங்களைப் பின்பற்றச் செய்யுங்கள். நன்கு படிக்க வையுங்கள்!

படிப்பொன்றே அவர்களைத் தலை நிமிர வைக்கும். திருக்குறள் நூலைப் பெரிதும் விரும்பிப் படிக்கச் சொல்லுங்கள். அஃதொன்றே போதுமான வாழ்வியல் நெளிவு சுளிவுகளைக் கற்றுத் தரும். நேர்மையாக வாழப் பழக்குங்கள். மற்றவர்க்குத் தர வேண்டிய பொருளோ, காசோ உடனடியாகத் தரவேண்டும் எனச் சொல்லி வளருங்கள். ஏமாளியாக வாழ்தல் கூடாது என்பதையும் சொல்லுங்கள். கடன் வாங்குதல் கூடாது என அறிவுறுத்துங்கள்.

★★★

பொறுப்பு தாய் தந்தைக்கும் பிள்ளைகட்கும் இருக்கவேண்டிய ஒன்றாகும். கடமையும் அவ்வாறே! தம் பொறுப்பை உணர்ந்து பிள்ளைகள் செயல்பட வேண்டும். தம் பொறுப்பை அறிந்து பெற்றோர் பணிசெய்ய வேண்டும்.

ஆணும் பெண்ணும் சமமே என்ற கருத்து எவ்வளவுதான் வலுப்பெறினும் ஆண்மகனைப் பெற்றவர்கள் ஒருபடி மேலாகவே கருதப்படுகின்றனர்.

பெண்பிள்ளையைப் பெற்றவர் ஒருபடி கீழ் நிலையிலேயே வைக்கப்படுகின்றனர். என் செய்ய? சமூக அமைப்பு அவ்வாறுள்ளது.

ஆனால்... பெற்றவரைப் பொறுத்தவரை ஆணும் பெண்ணும் சமநிலையில் வைத்து எண்ணத் தக்கவர்கள். ஆண், பெண் வேறுபாடு காட்டாதீர்கள். பெண்ணைப் பெற்றவர் அப் பெண்ணை ஒரு ஆடவனுக்குக் கட்டித் தரும்வரை வயிற்றில் நெருப்பைக் கட்டி இருப்பது போலத்தான். ஆணைப் பெற்றவர் அவ் ஆண்மகனுக்கு ஏற்ற பெண்ணொருத்தியைத் தேடிக் கட்டுவதும் இக்காலத்தே பிரம்மப் பிரயத்தனம்தான்.

எது எப்படியோ? இரு சாராரையும் படிக்க வைத்துக் கரையேற்றுங்கள். தன்னம்பிக்கையும் சமூக அக்கறையும் கொண்டவராய் அவர்களை வளருங்கள். இன்னார் பிள்ளை எனச் சொல்ல வேண்டும். அந்த அளவுக்கு நேர்த்தியாகவும் கீர்த்தியாகவும் பிள்ளைகள் இருக்க வேண்டும்.இப்படிக் கவனமாய் இருந்தால் எதுவும் நடக்காது.. சற்றே கவனமில்லாமல் விட்டுவிட்டால் எதுவும் நடக்கும். என்னென்ன நடக்கும்?

– புலவர் த.கு.கருணாநிதி
வாலாஜாபாத்

அதிக சம்பளமா? மனநிம்மதியா? உங்கள் தேர்வு எது?

இன்றைய காலத்தில் பலர் ஒரு நல்ல வாழ்க்கை என்றால் அதிக சம்பளம், பெரிய நகரம், உயரமான அலுவலகம் என்று நினைக்கிறார்கள். ஆனால் உண்மையில் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு அதிக பணம் மட்டும் போதுமா?

ஒரு நபர் பெரிய நகரத்தில் மாதம் ₹1,40,000 சம்பளம் பெற்றார். ஆனால்...

அதிக வீட்டு வாடகை

அதிக உணவுச் செலவு

போக்குவரத்து செலவு

தினசரி மன அழுத்தம்

சேமிப்பு இல்லை

இவ்வளவு சம்பளம் இருந்தும் மனநிம்மதி இல்லை!

அதே நபர் பின்னர் அமைதியான ஒரு நகரத்திற்கு மாறினார்.

மாத வருமானம் ₹40,000 மட்டுமே.

ஆனால்...

குறைந்த வீட்டு செலவு

குறைந்த உணவுச் செலவு

அதிக சேமிப்பு

குடும்பத்துடன் அதிக நேரம்

மனநிம்மதி மற்றும் சந்தோஷம்

இதனால் அவர் வாழ்க்கையில் உண்மையான மகிழ்ச்சியை அனுபவிக்கத் தொடங்கினார். இந்த சம்பவம் நமக்கு சொல்லும் முக்கியமான பாடம் என்னவென்றால்:

"அதிக சம்பளம் கிடைப்பது வெற்றி அல்ல. சம்பாதித்த பணத்தில் நிம்மதியாக வாழ்வதுதான் உண்மையான வெற்றி."

பலர் இன்று அதிக சம்பளத்திற்காக உடல்நலத்தையும், குடும்ப நேரத்தையும், மன அமைதியையும் இழந்து ஓடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் வாழ்க்கையின் இறுதியில் நாம் நினைப்பது சம்பளத்தை அல்ல; சந்தோஷமாக வாழ்ந்த நாட்களைத்தான்.

உங்கள் கருத்து என்ன?

நீங்கள் தேர்வு செய்வது எது?

₹40,000 சம்பளத்தில் மனநிம்மதியான வாழ்க்கையா?

₹1,40,000 சம்பளத்தில் அதிக அழுத்தம் நிறைந்த வாழ்க்கையா?

- வி .எம். குருசாமி

விபத்து காப்பீடு பெறுவதில் உள்ள முக்கிய விவரங்கள்!

வாகன விபத்து என்பது யாருக்கும் எதிர்பாராத ஒரு சம்பவம். அந்த நேரத்தில் பதற்றம், பயம், குழப்பம் ஆகியவற்றால் பலர் சில தவறுகளை செய்து விடுகிறார்கள். ஆனால் அந்த ஒரு தவறு உங்கள் Insurance Claim தொகையை பெறுவதில் பெரிய பிரச்சனையை ஏற்படுத்தலாம்.

அதனால், விபத்து நடந்த உடன் செய்யக்கூடாத 5 முக்கிய தவறுகள் மற்றும் செய்ய வேண்டிய சரியான நடவடிக்கைகள் என்ன என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

Insurance நிறுவனத்திற்கு தகவல் தெரிவிக்காமல் இருப்பது

விபத்து நடந்த உடனே உங்கள் Insurance நிறுவனத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

பின்னர் என்ன நடந்தது என்பதை நிரூபிக்க புகைப்படங்கள் முக்கிய ஆதாரமாக இருக்கும். வாகன சேதம், சாலை நிலை, வாகன எண்கள் உள்ளிட்ட அனைத்தையும் தெளிவாக புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்க வேண்டும்.

Insurance Surveyor ஆய்வு செய்யும் முன்பே வாகனத்தை சரி செய்துவிட்டால் Claim நிராகரிக்கப்பட வாய்ப்பு உள்ளது.

Surveyor அனுமதி அல்லது ஆய்வு முடிந்த பிறகே Repair செய்யுங்கள்.

சிலர் பயத்தில் அல்லது அவசரத்தில் நடந்த விபத்தை மாற்றி கூறுவார்கள்.

இது Insurance Claim நிராகரிக்கப்படுவதற்கான முக்கிய காரணமாக இருக்கலாம். நடந்த உண்மையை மட்டும் தெரிவிக்க வேண்டும்.

பெரிய சேதம், காயம், உயிரிழப்பு போன்ற சம்பவங்களில் FIR மிகவும் முக்கியமான ஆவணம்.

தேவையான இடங்களில் உடனடியாக போலீஸ் புகார் அளிக்க வேண்டும்.

முதலில் Insurance நிறுவனத்திற்கு தகவல் தெரிவிக்கவும்.

வாகன சேதம் மற்றும் விபத்து இடத்தின் புகைப்படங்கள், வீடியோக்கள் எடுக்கவும்.

Surveyor ஆய்வுக்காக காத்திருக்கவும்.

அனுமதி கிடைத்த பிறகே வாகனத்தை பழுது பார்க்கவும். தேவையான ஆவணங்களை சரியாக சமர்ப்பிக்கவும்.

விபத்து நடந்த நேரத்தில் பதற்றப்படாமல், தேவையான ஆதாரங்களை சேகரித்து Insurance விதிமுறைகளை பின்பற்றினால் Claim பெறும் வாய்ப்பு அதிகரிக்கும்.

எஸ்.சூர்யா

ஒரு சிறிய கவனக்குறைவு கூட ஆயிரக்கணக்கான ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்தலாம். எனவே இந்த தகவலை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும்.

பாஸ்போர்ட்டில் இத்தனை வகைகளா!

வெளிநாடு செல்ல வேண்டும் என்றால் அனைவருக்கும் தெரிந்த ஆவணம் பாஸ்போர்ட். ஆனால் இந்தியாவில் ஒரே மாதிரியான பாஸ்போர்ட் மட்டும் இல்லை என்பது பலருக்கும் தெரியாது. உண்மையில் இந்திய அரசு 6 வகையான பாஸ்போர்ட்களை வழங்குகிறது. ஒவ்வொன்றுக்கும் தனித்தனி பயன்பாடுகள் உள்ளன. இந்த தகவல் உங்களுக்கு பயனுள்ளதாக இருந்தால் உங்கள் நண்பர்களுக்கும் பகிருங்கள்.

சாதாரண இந்திய பாஸ்போர்ட் (Blue Passport) இது பொதுமக்களுக்காக வழங்கப்படும் பாஸ்போர்ட். சுற்றுலா செல்ல வேலைக்காக வெளிநாடு செல்ல கல்விக்காக வெளிநாடு செல்ல குடும்பத்தினரை சந்திக்க செல்ல இந்தியாவில் பெரும்பாலான மக்கள் பயன்படுத்துவது இந்த பாஸ்போர்ட் தான்.

அரசு அதிகாரி பாஸ்போர்ட் (White Passport). இந்த பாஸ்போர்ட் அரசு அதிகாரிகளுக்காக வழங்கப்படுகிறது.

இதன் மூலம் அந்த நபர் அரசின் பிரதிநிதியாக பயணம் செய்கிறார் என்பதை அடையாளப்படுத்துகிறது.

இராஜதந்திர பாஸ்போர்ட் (Maroon Passport). இது மிகவும் சிறப்பான பாஸ்போர்ட்.

தூதர்கள், உயர்மட்ட அரசு அதிகாரிகள், வெளிநாட்டு உறவுகள் தொடர்பான அதிகாரிகள். இவர்கள் இந்திய அரசின் சார்பில் வெளிநாடுகளில் பணியாற்றும்போது பயன்படுத்துகின்றனர்.

ECR பாஸ்போர்ட் (Emigration Check Required).

சில நாடுகளுக்கு வேலைக்காக செல்லும் நபர்களுக்கு இந்த வகை பாஸ்போர்ட் வழங்கப்படுகிறது.

குறைந்த கல்வித் தகுதி கொண்டவர்கள்வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்லுபவர்கள். இதன் நோக்கம் வெளிநாடுகளில் தொழிலாளர்கள் ஏமாற்றப்படாமல் பாதுகாப்பது.

OCI கார்டு (Overseas Citizen of India). இது முழுமையான பாஸ்போர்ட் அல்ல. ஆனால் இந்திய வம்சாவளியை சேர்ந்த வெளிநாட்டு குடிமக்களுக்கு வழங்கப்படும் சிறப்பு அட்டை.

இந்திய வம்சாவளி வெளிநாட்டு குடிமக்கள் இந்தியாவுக்கு பலமுறை வருபவர்கள் இதன் மூலம் இந்தியாவில் நீண்டகால வசதிகள் கிடைக்கும்.

அவசரகால பயண சான்றிதழ் (Emergency Certificate). பாஸ்போர்ட் தொலைந்துவிட்டால் அல்லது அவசரநிலையில் வெளிநாட்டில் சிக்கிக்கொண்டால் வழங்கப்படும் ஆவணம். பாஸ்போர்ட் இழந்தவர்கள் அவசரமாக இந்தியா திரும்ப வேண்டியவர்கள் இது தற்காலிக பயண ஆவணமாக செயல்படுகிறது.

பலர் "பாஸ்போர்ட் என்றால் நீல நிற புத்தகம் மட்டும் தான்" என்று நினைக்கிறார்கள். ஆனால் இந்திய அரசு பல்வேறு தேவைகளுக்காக வெவ்வேறு வகையான பாஸ்போர்ட்களை வழங்குகிறது.

நீங்கள் எந்த வகை பாஸ்போர்ட் பற்றி இதுவரை தெரியாமல் இருந்தீர்கள்?

அனுப்பியவர் : ஆனைமலை முத்து ராஜன்

உள்ளே வந்து மேசையில் அமர்ந்த கபாலிகான்.

"போனால் போகட்டும் போடா இந்த அரசியல் வாழ்க்கையில் நிரந்தரமாக யாரும் இல்லை போனால் போகட்டும் போடா" என்று தாளம் தட்டி பாடிக் கொண்டிருந்தார்.

அவருக்காகவே வாங்கி வைத்து பிரிட்ஜில் வைத்திருந்த குல்பி ஐஸ் எடுத்து நீட்டினோம். வாங்கி சுவைத்துக் கொண்டே இருந்தவர் அரசியலில் நிலைமை பார்த்தீர்களா.

59 ஆண்டுகளாக மாறி மாறி ஆட்சி செய்த தி.மு.க., அ.தி.மு.கவை வச்சு செய்யுது த.வெ.க.



என்ன சொல்றீங்க?

பொறுங்க ஒன்னு ஒன்னா சொல்றேன். அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா ஆட்சியில் இருந்தபோது தலைவா படத்துக்கு பிரச்சனை ஏற்பட்ட போது கொடநாட்டில் போய் விஜய் பார்த்தார். அப்போது அவர்கள் நின்ற கோலத்தை பத்திரிகைகள் தேர்தல் நேரத்தில் எடுத்து போட்டு கேலி செய்தன.

ஆமாம்!

ஆனா இன்னைக்கு அந்தக் கட்சியிலிருந்து ஒவ்வொரு எம்.எல்.ஏ வா ராஜினாமா பண்ண வெச்சு தங்கள் கட்சியில சேர்த்துக்கிறார் விஜய். ஆளுமை மிக்க ஜெயலலிதாவின் கட்சியை இன்று ஆளே இல்லாத கட்சியாக மாற்ற முயற்சிக்கிறார். தேர்தல் நேரத்தில் கூட அந்தக் கட்சியை மற்றும் பலர் என்று தான் விமர்சித்தார்.

ஆமா சொன்னாரு!

என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. கூட்டத்தில் த.வெ.க. கொடி காண்பித்ததை பார்த்து "பாத்தீங்களா பிள்ளையார் சுழி போட்டாச்சு"என்று குதூகளித்தவர் எடப்பாடி. எனவே அவரது தலைமையிலான கட்சியை சில்லு சில்லாக உடைக்கிறார்.

சரி தி.மு.க!

தி.மு.க.வை தன்னுடைய போட்டி (எதிரி)கட்சியாகவே ஆரம்பம் முதல் பிராண்ட் செய்தார் விஜய். ஆனால்...

என்ன ஆனால்!

தேர்தலுக்குப் பிறகு மு. க .ஸ்டாலினை அவர் சந்தித்தார். அதோடு மு .க. ஸ்டாலின் தலைமையில் தேர்தலை சந்தித்த கட்சிகளை சேர்ந்த தலைவர் இல்லங்களுக்கு சென்றார். ஆனாலும் வெளியில் இருந்து மட்டுமே ஆதரவு தருவார்கள் என்று நம்பிக் கொண்டிருந்த தி.மு.கவுக்கு பெரிய "செக்மேட்"வைத்தார் விஜய்.

எப்படி?

எந்த கூட்டணியை வைத்து 12 வருடங்கள் அசைக்க முடியாத சக்தியாக எல்லா தேர்தலையும் வெற்றிகரமாக சந்தித்த தி.மு.கவை

அந்த கூட்டணியில் இருந்து ஒவ்வொரு கட்சியாக வெளியேறச் செய்து வருகிறார் விஜய்.

அப்படியா?

அவர்களாகத்தான் வருகிறார்கள் என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் .வைகோ அதை போட்டு உடைத்து விட்டார்.

அவர் என்ன சொன்னார்?

உங்கள் கட்சி எம்எல்ஏக்கள் இரண்டு பேரை ராஜினாமா செய்யச் சொல்லுங்கள் அவர்களை நான் வெற்றி பெற வைக்கிறேன் என்று விஜய் சொன்னதாக வைகோ செய்தியாளர்கள் மத்தியில் சொல்லி இருக்கிறார் தங்கள் கட்சிக்காரர்கள் கூட்டத்திலும் சொல்லி இருக்கிறார்.

அடடே!

ஆனாலும் அதில் ஒரு சிக்கல்

என்ன சிக்கல்!

மற்ற திமுக கூட்டணி கட்சிகள்

அவரவர்கள் சின்னத்தில் நின்ற போது ம.தி.மு.க மற்றும் தி.மு.க சின்னத்தில் நின்று வெற்றி பெற்றது.

ஆகையினால் அந்த இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களின் ராஜினாமா செய்ய சொல்லி வைகோ கேட்டபோது முடியாது என்று தெரிவித்து விட்டார்களாம். இதையும் வை.கோ நிருபர்கள் கூட்டத்தில் சொன்னார். எனவே திமுகவிலிருந்து இரண்டு எம்எல்ஏக்களை எடுத்து வரலாம் என்ற விஜய் கணக்கு பொய்த்து போனது. ஆனாலும் வேறு விதத்தில் அவருக்கு வெற்றி.

எப்படி!

திமுக கூட்டணியில் இருந்து அந்த கட்சிகளை பிரித்து எடுத்து எம்எல்ஏக்களை ஆதரவு பெற வைத்துவிட்டது ஒரு பக்கம் இருந்தாலும் தொடர்ந்து பல விஷயங்களில் அதே திமுகவை கூட்டணி கட்சிகளை எதிர்க்கிற அளவுக்கு மாற்றி விட்டிருக்கிறார் விஜய்.

அதற்காக ஒரு கூட்டத்தையும் ஏற்பாடு செய்து இதுவரை இலை மறை காயாக இருந்து வந்த திமுக எதிர்ப்பு திமுக கூட்டணி கட்சிகள் இடையே நேரடியாகவே களம் காணுகிற அளவுக்கு களத்தை உருவாக்கி இருக்கிறார் விஜய்.

எல்லா கூட்டணி கட்சிகளும் வெளியேறி விட்டதால் தி.மு.க தனித்து விடப்பட்டதாக அரசியல் ஆய்வாளர் மணி போன்றவர்கள் சொல்லி வருகிறார்கள். ஆனால்

ஆனால் என்ன?

ஒரு திருமண கூட்டத்தில் ஆ .ராசா தங்கள் தலைவர் முக ஸ்டாலினை பார்த்து "தயவுசெய்து தனியாக நிற்கலாம் தலைவரே" என்று சொன்னபோது அந்த அரங்கமே கைத்தட்டலால் அதிர்ந்து போனது.

எனவே திமுக கூட்டணி கட்சிகள் போனதை பற்றிய திமுகவினர் கொஞ்சம் கூட வருத்தப்பட்டதாக தெரியவில்லை.

அதேபோல் அதிமுகவில் எடப்பாடி தலைமையிலான கட்சி யார் போனாலும் தொண்டர்கள் அப்படியே இருக்கிறார்கள் என்ற சூழல் இருக்கிறது எனவே எங்கள் கட்சி அசைக்க முடியாது என்று எடப்பாடியார் நினைக்கிறார்.

எனவே இரண்டு திராவிட கட்சிகளின் நிலைமை தான் மேலே நான் சொன்ன பாட்டு பாடும் சூழல்.

பார்ப்போம்.

அப்போ திமுக அதிமுக கூட்டணி வந்துருமோ?

வரும் ஆனா வராது வரட்டா என்று சொல்லி வெளியேறினார் கபாலிகான்.

ஆபத்தை தரும் எந்திர பறவையின் இரைச்சல்

இந்தியாவின் முக்கிய விமான நிலையங்களை ஒட்டியுள்ள அடர்த்தியான குடியிருப்புப் பகுதிகளில், சில நிமிடங்களுக்கு ஒருமுறை விமானங்கள் பறந்து செல்லும் அல்லது தரையிறங்குகிறது. இதனால் அந்த பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பகலிலும், இரவிலும் தொடர்ச்சியான விமான இரைச்சல் என்பது பல ஆண்டுகளாக அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறியுள்ளது.

தற்போதுள்ள இந்திய விமானப் போக்குவ ரத்து மற்றும் சுற்றுச்சூழல் விதிமுறைகளின் படி, விமான நிலையங்கள் ஒலி அளவீடுகளின் அடிப்படையில் இரைச்சல் பரவல் வரைபடங்களைத் தயாரிக்கின்றன. இதன் அதிக இரைச்சல் பாதிப்படுகின்றன. ஆனால், மக்கள் எதிர்கொள்ளும் உடல்நல பாதிப்புகள் குறித்து போதிய கவனம் செலுத் தப்படவில்லை என்று ஆய்வாளர்கள் கூறு கின்றனர்.

விமான இரைச்சலால் பொதுமக்களுக்கு ஏற்படும் உயிரியல் தாக்கங்கள், உடலில் அழற்சி, மனஅழுத்தம் சார்ந்த மாற்றங்கள் மற்றும் அறிவாற்றல் பாதிப்புகள் போன்றவை குறித்து சில புதிய ஆய்வுகள் சுட்டிக்காட்டு கின்றன. இருப்பினும் ஒழுங்குமுறை கண்காணிப் புக்கும், உண்மையான உடல்நல ஆபத்துக ளுக்கும் இடையிலான இடைவெளி தொடர்ந்து அதிகரித்து வருவதாக நிபுணர் கள் எச்சரிக்கின்றனர். பாதுகாப்பு உடலியக்க மற்றும் இணை அறிவியல் நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானி மனிஷ் சுக்லா மேற்கொண்ட ஆய்வில், டெல்லி விமான நிலையத்தில் நீண்டகாலமாக விமான இரைச்சலுக்கு ஆளாகியிருந்த விமானப்படை பணியாளர் கள் ஆய்வு செய்யப்பட்டனர். அவர்களிடம் உடல் முழுவதும் ஏற்படும் அழற்சி, மன அழுத்தம், இதயத் துடிப்பு மாறு பாடு குறைதல் போன்ற அறிகுறிகள் கண்ட றியப்பட்டன. கேட்கும் திறன் சாதாரணமாக இருந்தபோதிலும், காது மற்றும் நரம்பு மண்டல செயல்பாடுகளில் நுண்ணிய பாதிப்புகள் இருப்பதும் தெரியவந்தது. இந்த முடிவுகள், விமான இரைச்சல் கேட் கும் திறனை மட்டுமல்லாமல், உடலின் பல் வேறு அமைப்புகளையும் பாதிக்கும் நீண்ட கால உயிரியல் அழுத்தக் காரணியாக செயல்படக்கூடும் என்பதை வெளிப்படுத்துகின்றன.

இரைச்சலின் பாதிப்பு அதன் சத்த அளவைமட்டும் சார்ந்ததல்ல. அது எத்தனை முறை ஏற்படுகிறது, எவ்வளவு நேரம் நீடிக் கிறது, குறிப்பாக இரவில் தூக்க நேரங்களில் மக்கள் மீண்டும் ஒய்வடைய போதிய இடை வெளி கிடைக்கிறதா என்பதையும் சார்ந்துள்ளது என்று ஆய்வாளர்கள் விளக்குகின்றனர்.

உலக சுகாதார அமைப்பும், சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பும் இந்த காரணிகளை முக்கியமானவையாகக் கருதுகின்றன. ஆனால் தற்போதுள்ள இரைச்சல் அளவீட்டு முறைகள், தொழிற்சா லைகளில் ஏற்படும் நிலையான இரைச்சலை அளவிடுவதற்காக வடிவமைக்கப்பட்டவை. விமானங்கள் மேலே பறக்கும் போது திடீ ரென அதிகரித்து பின்னர் குறையும் இடை வெளி இரைச்சல் தாக்கங்களை அவை முழுமையாகப் பதிவு செய்ய முடியாது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

வாரணாசி ஐ.ஐ.டி.முன்னாள் பேராசிரியர் மார்கண்டேய திவாரி கூறுகையில், தற்போதைய சராசரி இரைச்சல் அளவீடுகள் விமான இரைச்சலின் உண்மையான தாக் கத்தைப் புரிந்துகொள்ள போதுமானதாக இல்லை என்றார். மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் விமான இரைச்சலை அதிகாரப்பூர்வமாக கண்காணித்தாலும், அதன் பெரும்பாலான நடவடிக்கைகள் விதிமுறை பின்பற்றலை உறுதிப்படுத்துவதிலேயே கவனம் செலுத் துகின்றன. பொதுமக்களின் நீண்டகால உடல்நல பாதிப்புகளை மதிப்பிடுவதில் போதிய முக்கியத்துவம் அளிக்கப்பட வில்லை என்று நிபுணர்கள் குற்றம்சாட்டு கின்றனர். மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சிலின் தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூத்த விஞ்ஞானி சதீஷ் கே. லோகண்டே கூறு கையில், இந்தியாவில் விமான இரைச்சல் கண்காணிப்புமுறையை மேம்படுத்த வேண் டிய அவசியம் உள்ளது என்றார்."

விமான இரைச்சல் தொடர்பான தரவுகள் இந்தியாவில் உள்ளன. ஆனால், அந்தத் தரவுகள் உடல்நல பாதிப்புகளுடன் போதுமான அளவில் இணைக்கப்படவில்லை என்பதே முக்கிய பிரச்சினை என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த நிலை மாறாவிட்டால், மக்களின் நீண்டகால உடல் நலவிளைவுகள் குறித்து போதுமான புரிதல் இல்லாத நிலை நீடிக்கும் என அவர்கள் எச்சரித்துள்ளனர்.

அனுப்பியவர்: பொள்ளாச்சி முத்துராஜ்

மாரடைப்புக்கான அறிகுறிகள்!

திடீர் மாரடைப்புகளால் உயிரிழப்போர் விகிதம் சமீப காலமாக அதிகரித்து வருகின்றன. இதுபோன்ற நேரத்தில், மாரடைப்புக்கான அறிகுறிகள் என்னென்ன என தெரிந்துகொள்வது அதிலிருந்து நம்மை தற்காத்துக் கொள்ள நமக்கு உதவும். அப்படியான பொதுவான சில அறிகுறிகளை இங்கே தெரிந்துகொள்ளுங்கள்...

நடக்கும் போது நெஞ்சு வலி ஏற்படுவது, ஒருநாளில் அடிக்கடி / அதிகமாக புளித்த ஏப்பம் ஏற்படுவது, படுத்திருக்கும் போது மூச்சுத்திணறல் ஏற்படுவது போன்ற அறிகுறிகள் தெரிந்தால் உஷாராக இருங்கள்.

நெஞ்சில் திடீர் வலி, அசௌகரியம் போன்ற அறிகுறிகள் தோன்றலாம். அதிலும் இரவில் மார்பு வலி அதிகமாக இருக்கும். அது தோள்பட்டை, கை, கழுத்து, தாடை, முதுகு என உடலின் மற்ற பாகங்களுக்கும் பரவும்.

வழக்கத்துக்கு மாறாக குறைவாக நடப்பதும் முக்கிய அறிகுறி. இது, இதயத்தில் அடைப்பு இருப்பதை உணர்த்துகிறது.

இது கரோனரி தமனி (coronary artery) அடைப்பு பிரச்சனையின் மற்றொரு அறிகுறியாகும். தலைச்சுற்றலுடன் மங்கலான பார்வை மற்றும் பார்வைத் தெளிவின்மை ஆகியவை ஏற்படலாம். மார்பு வலி மற்றும் சுவாசிப்பதில் சிரமம் ஏற்படும் போது தலைச்சுற்றலும் ஏற்படலாம். சில நேரங்களில் குமட்டல், வாந்தியும் வரலாம்.

இதயத்தில் ஏதேனும் பிரச்னை ஏற்பட்டால், அது உடலைப் பாதிக்கும். குறிப்பாக சுவாசிப்பதில் சிரமம் ஏற்படும். இது இதய அடைப்பு பிரச்சனையின் அறிகுறியாகும். இதயத்திற்கு ரத்த ஓட்டம் சரியாக இல்லாதபோது மாரடைப்பு ஏற்படுகிறது.

சில சமயங்களில் Heart blocks சோர்வை ஏற்படுத்தும். எந்த ஒரு சிறிய வேலையும் உங்களை விரைவாக சோர்வடையச் செய்யும். உடல் ஆற்றலை இழக்கும். இதயத்திற்கு ரத்த ஓட்டம் குறைந்தால், அதன் தசைகளுக்கு ஆக்ஸிஜன் செல்லாது. இதனால் சோர்வு ஏற்படுகிறது.

அதிக வியர்வை: தமனிகளில் அடைப்பு ஏற்படும் போது, இதயத்தில் அழுத்தம் அதிகரிப்பதால் வியர்ப்பது இயல்பானது. இது தீவிரமானதாக இருந்தால், மருத்துவரை அணுகவும். உடல் வெப்பநிலையில் ஏற்படும் மாற்றங்களாலும் வியர்வை ஏற்படலாம். இது மார்பு வலி அல்லது பிற அறிகுறிகளுடன் தொடர்புடையது.

இவையன்றி அரிதான சந்தர்ப்பங்களில், கரோனரி தமனி அடைப்பால் பாதிக்கப்பட்டவர்கள் முதுகெலும்பு, கைகள், கழுத்து, தாடை போன்ற உடலின் மற்ற பகுதிகளிலும் வலி மற்றும் அசௌகரியத்தை அனுபவிக்கலாம். இதுபோன்ற அறிகுறிகள் தெரியவந்தால், உடனடியாக அருகிலுள்ள மருத்துவரை அணுக வேண்டியது அவசியம்.

குறிப்பாக வயது முதிர்ந்தவர்கள், இதுபோன்ற அறிகுறிகளை உதாசீனப்படுத்தக்கூடாது. அனைத்து வயதினருமே ஆண்டுக் கொருமுறை முழு உடல் பரிசோதனை செய்துகொள்வது நல்லது.

விடாமுயற்சி வெற்றியை தரும்!

ரயில்வே கேட் கீப்பர் காவல் துறை கண்காணிப்பாளர் ஆனார்!

பீகாரின் சமஸ்திபூரைச் சேர்ந்த ராஜு குமார் இந்திய நேபாள எல்லையோரம் உள்ள ரக்ஸாலில் உள்ள ரயில்வே கேட் எண் 33ல் ராஜு கேட்மேனாகப் பணிபுரிந்தார். நீண்ட வேலை நேரம். மாறுபட்ட வானிலை நிலைகளைக் கையாண்டு, ரயில்வே கிராசிங்கைப் பராமரிப்பதே அவரது அன்றாட வழக்கமாக இருந்தது. அத்துடன் பி.பி.எஸ்.சி தேர்வுக்கான தயாரிப்பையும் அவர் தொடர்ந்தார். தினமும் ரயில்வே கிராசிங்கில் நின்று, கேட்மேனாக 12 மணி நேரம் வேலை செய்துவிட்டு, மற்ற நேரங்களில் படித்து வந்தார். கடினமாக படித்த அவர், 70வது பீகார் பொதுச் சேவை ஆணைய தேர்வை தனது முதல் முயற்சியிலேயே தேர்ச்சி பெற்று, துணைக் காவல் கண்காணிப்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவர் பீகார் மாநில அளவில் 72வது ரேங்க் பெற்று சாதனை படைத்துள்ளார், இது அவரது வாழ்க்கைப் பயணத்தில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

கேட் கீப்பராக இருந்த ராஜுவின் ஆரம்ப கால வாழ்க்கை எளிதானது இல்லை..அவர் 10ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த 12 வயதே ஆனபோது, அவருடைய தந்தை காலமானார். இந்த இழப்பு அவரது குடும்பத்திற்குப் பொருளாதாரச் சிக்கல்களை ஏற்படுத்தியதுடன், கல்வியைத் தொடர்வதையும் சவாலாக மாற்றியது. அந்த இக்கட்டான கட்டத்தில், அவரது உறவினர் ராஜேஷ் குமார் சுமன் அளித்த ஆதரவு, அவர் படிப்பைத் தொடர உதவியது. ராஜேஷ், ரோசராவில் 'பி.எஸ். எஸ் கிளப்' என்ற இலவச பயிற்சி மையத்தை நடத்தி வந்தார், அங்கு மாணவர்களுக்குப் போட்டித் தேர்வுகளுக்கான வழிகாட்டுதல் வழங்கப்பட்டது. இந்த ஆதரவுடனும், தனது சொந்த மனஉறுதியுடனும், ராஜு இடைவிடாமல் படித்தார்

10ம் வகுப்பு படிக்கும் போது, அப்பா தவறிய நிலையில், குடும்பத்தின் மொத்த பாரத்தை சுமந்த ராஜு, அப்படியான சூழலில் கிடைக்கும் வேலைசெய்து குடும்பத்தை காப்பாற்றியபடி, குரூப் டி தேர்வு மூலம் ரயில்வேயில் கேட் கீப்பராக சேர்ந்தவர், அப்படியே அஞ்சல் வழியாக டிகிரி படித்து, அத்துடன், டிஎஸ்பி ஆகி உள்ளார்.

அர்ப்பணிப்பும், கற்றலில் அவருக்கிருந்த ஆர்வத்தையும் பார்த்த நண்பர்கள், அவரை டிஎஸ்பி ஆக தயாராகுமாறு கூறினார்கள். அவர்களின் அறிவுரையைப் பின்பற்றி, ராஜு தனது ரயில்வே கடமையைத் தொடர்ந்துகொண்டே பட்டப்படிப்பில் சேர்ந்தார், அதோடு பி.பி.எஸ்.சி தேர்வுக்கும் தயாராகத் தொடங்கினார்.

ஏழ்மையில் இருந்தாலும் வறுமையில் உழன்றாலும் முன்னேற வேண்டும் என்று எண்ணத்துடிப்பவர்கள் எந்த சூழ்நிலையிலும் தங்களை மேம்படுத்திக் கொண்டு உயர்ந்த நிலைக்கு வருவார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணம். விடாமுயற்சி வெற்றியை தரும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

காற்றிலே

அசையும் தென்றல் காற்றிலே
இசையும் அசையும் காற்றிலே
இமயம் அசையும் காற்றிலே
இளமையும் துடிக்கும் காற்றிலே
புலமையும் புலப்படும் காற்றிலே
பூவையும் அசைத்திடும் காற்றிலே
பாவையும் மயங்கும் காற்றிலே
பாலையும்பருகும் குழந்தை காற்றிலே
சேலையும் அசையும் காற்றிலே
சோலையும் அசையும் காற்றிலே
சொர்க்கமும் கிடைக்கும் காற்றிலே
சொக்கத் தங்கம் மிளிரும் காற்றிலே
மாலையும் மயக்கும் காற்றிலே
மலையும் மகிழ்வுறும் காற்றிலே
சிலையும் சினுங்கும் பெண் காற்றிலே
சிலுவையும் விழித்திடும் பூங்காற்றிலே

கவிஞர் மருதூர்
ஆறுமுக. ராஜமாணிக்கம்

மித்ரா டைம்ஸ்

சந்தா தொகை அனுப்பி விட்டீர்களா!

சந்தா செலுத்துபவர்களுக்கு சிறப்பு சலுகையாக...

மித்ரா டைம்ஸ் இதழுடன்...

பெண் உலகம், மித்ரா பிக்சர்ஸ் நியூஸ்

ஆகிய இரண்டு இணைப்பு இதழ்கள் அனுப்பி வைக்கப்படும்.

சந்தா செலுத்துபவர்களுக்கு மட்டுமே இந்த சிறப்பு சலுகை

3 ஆண்டு சந்தா : 900/-

6 ஆண்டு : சந்தா: 1500/-

தொடர்புக்கு: சந்தா மேலாளர் 9003107102

நூலகங்களில் சமூக ஊடகங்களின் முக்கியத்துவம்

நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் நூலகங்கள் மற்றும் அவற்றின் பயனர்களிடையே இணையவழிச் சேவைகள் மற்றும் தரவுத்தளங்கள் (databases) பெரும் பேசுபொருளாக உள்ளன. இதன் விளைவாக, LinkedIn, Facebook, Myspace மற்றும் Twitter போன்ற சமூக வலைப்பின்னல் தளங்களுடன் பயனர்களின் தொடர்பு வலுவாக உள்ளது. பயனர்களின் தேவைகளை நன்கு புரிந்துகொள்ளும் நோக்கில், பல நூலகங்கள் Twitter, Myspace மற்றும் Facebook உள்ளிட்ட பல்வேறு சமூக ஊடகத் தளங்கள் வாயிலாகச் சேவைகளை வழங்கத் தொடங்கியுள்ளன. நூலகங்கள் தங்களுக்கெனத் தனிப்பட்ட Facebook பக்கங்களைக் கொண்டுள்ளன. மேலும், அவை பல்வேறு கல்வி மற்றும் சமூக வலைப்பின்னல் இணையதளங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. ஒரே மாதிரியான ஆர்வங்களைக் கொண்ட பல்வேறு தொழில் வல்லுநர்கள், சக பணியாளர்கள், தனிநபர் குழுக்கள், குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் ஆகியோருடன் பயனர்களை இணைப்பதே சமூக வலைப்பின்னல் தளங்களின் முக்கிய நோக்கமாகும்.

ஆவணங்கள், புத்தகங்கள் மற்றும் பிற பொருட்களைச் சேமித்து வைப்பதே நூலகத்தின் தொடக்ககால நோக்கமாக இருந்தது. ஆனால், இருபத்தோராம் நூற்றாண்டில் நூலகம் குறித்தக் கண்ணோட்டம் முழுமையான மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது. தற்போதைய நூலகங்களில் மின்னூல்கள் (e-books), கணினிகள், குறுந்தகடுகள் (CDs), டிவிடிகள் (DVDs) மற்றும் ஸ்கேனர்கள் (scanners) உள்ளிட்ட அனைத்து வகையான டிஜிட்டல் வளங்களும் இடம்பெற்றுள்ளன.

நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் நூலகங்கள் மற்றும் அவற்றின் பயனர்களிடையே இணையவழிச் சேவைகள் மற்றும் தரவுத்தளங்கள் பெரும் பேசுபொருளாக உள்ளன. இதன் விளைவாக, LinkedIn, Facebook, Myspace மற்றும் Twitter போன்ற சமூக வலைப்பின்னல் தளங்களுடன் பயனர்களின் தொடர்பு வலுவாக உள்ளது. பயனர்களின் தேவைகளை நன்கு புரிந்துகொள்ளும் நோக்கில், பல நூலகங்கள் Twitter, Myspace மற்றும் Facebook உள்ளிட்ட பல்வேறு சமூக ஊடகத் தளங்கள் வாயிலாகச் சேவைகளை வழங்கத் தொடங்கியுள்ளன. நூலகங்கள் தங்களுக்கெனத் தனிப்பட்ட Facebook பக்கங்களைக் கொண்டுள்ளன. மேலும், அவை பல்வேறு கல்வி மற்றும் சமூக வலைப்பின்னல் இணையதளங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. நூலகங்கள் தங்கள் பயனர்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்கின்றனவோ, அதேபோல Web

2.0 தொழில்நுட்பம், சமூக நிறுவனங்கள், ஊடக வல்லுநர்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவையும் இத்தகைய தொடர்புகளை மேற்கொள்கின்றன.

சமூக வலைப்பின்னல் சேவைகள், பயனர்கள் தங்கள் சொந்த சுயவிவரங்களை (profiles) உருவாக்கவும், நிர்வகிக்கவும் மற்றும் பகிரவும் எளிதாக்குகின்றன. மேலும், நண்பர்களைச் சேர்க்கவும், பிற இணையதளங்களில் உள்ள நண்பர்களைக் கண்டறியவும், ஒரே மாதிரியான ஆர்வங்களைக் கொண்டவர்களை இணைத்து குழுக்களை உருவாக்கவும் இவை உதவுகின்றன.

அல்டாக்ஸ் மற்றும் பிறர் (2021) பாகிஸ்தானில் உள்ள நூலகங்களின் செயல்திறனை மேம்படுத்துவதில் சமூக ஊடகங்களின் (SM) பயன்பாடு குறித்து ஆய்வு செய்தனர். இவ்வாய்வு 'மங்கி சர்வே' (Monkey Survey) மூலம் நடத்தப்பட்ட கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டது. 71 கேள்வித்தாள்களிலிருந்து பெறப்பட்ட தரவுகள் SPSS மென்பொருள் கருவியைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டன. பதிலளித்தவர்களில் 73.2% பேர் 2008க்குப் பிறகே சமூக ஊடகங்களைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர் என்பதையும், பல்கலைக்கழக நூலகங்களே (53%) இதில் முன்னணியில் உள்ளன என்பதையும் முடிவுகள் காட்டுகின்றன. அதேவேளையில், 56.3% பேர் வலைப்பதிவுகளின் (blogs) பயனை நம்புகின்றனர் மற்றும் 76.1% பேர் ஃபேஸ்புக்கைப் (Facebook) பயன்படுத்துகின்றனர். தொழில்முறைத் தொடர்புகளை வளர்ப்பது (74.6%) சமூக ஊடகப் பயன்பாட்டின் முக்கிய நோக்கமாகவும், அதைத் தொடர்ந்து நூலகச் சேவைகளை மேம்படுத்துவது (69%) அடுத்த நோக்கமாகவும் உள்ளன.

நூலகங்களில் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதில் உள்ள முக்கிய 3 சவால்கள்: (i) குறைந்த இணைய இணைப்பு வேகம்,

(ii) அலுவலகத்தில் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கான கட்டுப்பாடுகள் மற்றும் (iii) தொழில்நுட்பச் சிக்கல்கள்.

சுமாதேவி மற்றும் கும்பர் (2019) ஆகியோர் சமூக வலைப்பின்னல் என்ற கருத்தாக்கத்தையும், டிஜிட்டல் யுகத்தில் நூலகச் சேவைகளை மேம்படுத்துவதில் அதன் பயன்பாட்டையும் ஆய்வு செய்தனர். சமூக ஊடகப் பயன்பாடு அனைவருக்கும் ஒரு நேர்மறையான அனுபவமாக அமையவும், ஏற்றுக்கொள்ளக்கூடிய இணைய நடத்தை மற்றும் செயல்பாடுகள் குறித்து வழிகாட்டவும், கல்வி நிறுவனங்களுக்குச் சிறந்த நடைமுறைகளைக் கொண்ட சமூக ஊடகக் கொள்கை (Social Media Policy) அவசியமாகும்.

ஷஃபிக் மற்றும் பிறர் (2010) தங்கள் ஆய்வுகளில், பாகிஸ்தானில் உள்ள நூலகங்கள் பல ஆண்டுகளாக வலைப்பதிவுகள், ஃபேஸ்புக், ட்விட்டர் (Twitter) போன்ற சமூக ஊடகச் செயலிகளைப் பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தி வருவதைக் கவனித்தனர். இச்செயலிகளின் பயன்பாட்டு நிலை குறித்த விவரங்களை அறிந்துகொள்வது அவசியமாகும்.

முனைவர்
இரா.கோதண்டராமன்
அரசு கலைக் கல்லூரி,
நந்தனம், சென்னை.

எம் பதில்கள்

பாடத்திட்ட மறு வடிவமைப்புக்கு மயில்சாமி அண்ணாதுரை நியமிக்கப்பட்டுள்ளாரே?

ஆசிரியர் சங்கரன். கடையநல்லூர்

தமிழகப் பள்ளி பாடத்திட்டத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதற்காக, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி டாக்டர் மயில்சாமி அண்ணாதுரையை, பள்ளி கல்வித் துறை பாடத்திட்ட வடிவமைப்பு குழுவின் தலைவராக தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது.

டாக்டர் மயில்சாமி அண்ணாதுரை, இந்தியாவின் மிக வெற்றிகரமான விண்வெளி திட்டங்களான சந்திரயான்1 திட்ட இயக்குநராக செயல்பட்டவர். மேலும், சந்திரயான்2 மற்றும் செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்த மங்கள்யான் திட்டங்களில் முதன்மையான தலைமை பொறுப்புகளை வகித்து, இந்தியாவிற்கு உலக அரங்கில் பெருமை தேடித்தந்தவர். இத்தகைய சாதனை விஞ்ஞானியின் வழிகாட்டுதலில் புதிய பாடத்திட்டம் உருவாக்கப்பட உள்ளது பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இன்றைய நவீன காலகட்டத்திற்கு ஏற்ப மாணவர்களின் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் பகுத்தறிவு சிந்தனையை வளர்க்கும் வகையில், பள்ளி பாடத்திட்டத்தை மறுவடிவமைப்பு செய்யும் முக்கிய பொறுப்பு இவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவருடைய அனுபவமும், தொலைநோக்கு பார்வையும் தமிழக அரசு பள்ளி மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தி, அவர்களை உலகளாவிய போட்டிகளுக்குத் தயார்படுத்தும் என்று கல்வியாளர்களும் பெற்றோர்களும் மிகுந்த நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

மித்ரா டைம்ஸ் சார்பில் நாம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்

2. தங்கம் விலை சரியா தொடங்கியுள்ளதே?

ஸ்ரீ லட்சுமி, வேலங்குடி

சர்வதேச பொருளாதார மாற்றங்கள் மற்றும் அமெரிக்க வட்டி விகிதங்கள் காரணமாக தங்கம் விலையில் வரலாறு காணாத சரிவு ஏற்பட்டுள்ளது. சென்னையில் ஒரு சவரன் ஆபரணத் தங்கம் ரூ.2,160 குறைந்து ரூ.1,04,240 க்கும், ஒரு கிராம் ரூ.270 குறைந்து ரூ.13,030க்கும் விற்பனையாகிறது.

கிராம் ஒன்றுக்கு ரூ.270ம், சவரனுக்கு ரூ.2,160ம் குறைந்துள்ளது.

அமெரிக்க பெடரல் ரிசர்வ் வட்டி விகிதங்களை உயர்த்த வாய்ப்புள்ளதால், முதலீட்டாளர்கள் வட்டி தரும் பத்திரங்களில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டுகின்றனர். இதனால் தங்கம் மீதான முதலீடுகள் குறைகின்றன.

அமெரிக்காஈரான் போர் பதற்றம் மற்றும் கச்சா எண்ணெய் விலையில் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்கள் போன்ற காரணிகளால் தங்கத்தின் சர்வதேச மதிப்பு சரிவை சந்தித்துள்ளது. ஜனவரி மாத உச்சத்தில் இருந்து தங்கம் விலை சுமார் 30% வரை சரிந்துள்ளது.

பிரதமர் மோடி அவர்கள் சில நாட்களுக்கு முன்பு நாட்டு மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

புதிய தங்கத்திற்குப் பதிலாக, வீடுகளில் மற்றும் லாக்கர்களில் பயன்படுத்தப்படாமல் இருக்கும் பழைய நகைகளைக் கொண்டு புதிய டிசைன்களை உருவாக்குமாறு மோடி ஊக்கப்படுத்தினார். பிரதமர் மோடியின் இந்த வேண்டுகோளை ஏற்று, மக்கள்

தங்கம் வாங்குவதைக் குறைத்துள்ளதாகவும், இதனால் தங்கத்தின் இறக்குமதி கணிசமாகக் குறைந்துள்ளதாகவும் 'மன் கி பாத்' நிகழ்ச்சியில் அவர் நாட்டு மக்களுக்குப் பாராட்டு தெரிவித்தார்.

அமோனியா வாயு கசிந்து ஏற்பட்ட விபத்து பற்றி!

எஸ்.ஆர்.ரமேஷ், திருவள்ளூர்.

திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையம் அடுத்த கன்னிகைப் பேர் கிராமத்தில் புனித பீட்டர் பால் கடல் உணவு பொருள்களை பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் தனியார் நிறுவனத்தில் கடந்த 21ந்தேதி அமோனியா வாயு கசிந்து விபத்து ஏற்பட்டது. இதில் 74 வடமாநில தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு 2 தனியார் மற்றும் 2 அரசு ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர் .

இதில் சிகிச்சை பலனின்றி ஒடிசா மாநிலத்தை சேர்ந்தவர்கள் 11 பேர், அசாம் மாநிலத்தை சேர்ந்த 2 பேர் என 13 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களில் 15 வயது சிறுமிகள் 2 பேரும் அடங்குவர். உயிரிழந்தவர்களின் உடல்கள் திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம் சார்பில் பிரேத பரிசோதனை முடிந்து அவர்களது சொந்த மாநிலத்துக்கு விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன.

காலச்சக்கரம் சுழலுகிறது என்பதற்கு அரசியலில் ஒரு உதாரணம் சொல்லுங்க!

பொன்.வேலாயுதம், திருவாலங்காடு

அரசியலில் 'காலச்சக்கரம்' என்பது அதிகாரமும் செல்வாக்கும் நிலையற்றது என்பதை உணர்த்தும் ஒரு தத்துவமாகும். ஒரு காலத்தில் உச்சத்தில் இருந்த

தலைவர்கள் அல்லது கட்சிகள் காலப்போக்கில் வீழ்ச்சியடைவதையும், செல்வாக்கற்றவர்கள் மீண்டும் அதிகாரத்திற்கு வருவதையும் இது குறிக்கிறது. இது காலத்திற்கு ஏற்ப தேர்தல் சுழற்சிகள், சமூக மாற்றங்கள் மற்றும் மக்கள் ஆதரவின் அடிப்படையில் இயங்குகிறது.

பல உதாரணங்கள் இருந்தாலும் சமீபத்திய உதாரணம் தமிழக சட்டசபை நடவடிக்கைகளை நீங்கள் கவனித்திருந்தால் புரிந்து இருக்கும்.

சபாநாயகர் ஜே.சி.டி பிரபாகர். ஆளுங்கட்சி வரிசையில் அமைச்சர் செங்கோட்டையன். எதிர்க்கட்சி வரிசையில் ஓ பன்னீர்செல்வம். எடப்பாடி பழனிசாமி.நான் சொல்லும் போதே நீங்கள் சிரிப்பது தெரிகிறது. இதுதான் கால சக்கரம்.

ஓ.பி.எஸ், ஜே.சி.டி. பிரபாகரன் ஒரு அணியில் அரசியலில் இருந்தனர் இப்போது சபாநாயகராக இருக்கும் ஜே.சி.டி பிரபாகரனிடம் அனுமதி கேட்டு விட்டு தான் பேச வேண்டும். அவரை கட்சியில் விட்டு நீக்கிய எடப்பாடி பழனிச்சாமி கூட பேச வேண்டும் என்றால் சட்டப்பேரவையில் சபாநாயகர் விருப்பத்தின் பேரில் தான் பேச முடியும்.

அதேபோல் எந்த செங்கோட்டையனை தேர்தல் பிரச்சாரத்தில் எடப்பாடி பழனிச்சாமி "செங்கோட்டையா. பாத்துக்க. எல்லாத்தையும் எடுத்து விட்டா நீ நடமாட முடியாது"என்று பேசினார். அதே செங்கோட்டையன் ஆளும் வரிசையில் உட்கார்ந்து இருக்கிறார். நேர் எதிரில் எதிர்க்கட்சி வரிசையில் எடப்பாடி பழனிசாமி உட்கார்ந்திருக்கிறார். இதுதான் காலச்சக்கரம். அரசியலும் காலமும் யாரையும் எங்கேயும் எப்போது வேண்டுமானாலும் உட்கார வைக்கும். தூக்கி அடிக்கும்.

இலட்சியம் இல்லா வாழ்க்கை வெற்றியைத் தராது!

"**வா**ழ்க்கைன்னா லட்சியம், குறிக்கோள் வேணும்!" இப்படிச் சொல்வதில் உண்மை இருந்தாலும், நமது லட்சியம் எப்படி இருக்க வேண்டும் என்பது பலருக்கும் பிடிபடாத ஒன்றாகவே உள்ளது.

லட்சியம் வைப்பது என்றால் ஏதோ ஒன்றைப் பற்றி வெறுமனே கனவு காண்பதோ,ஏதோ ஒன்றுக்காக ஆசைப்படுவதோ அல்ல. உண்மையான இலட்சியம், திட்டமிடுவது, அதை அடைய கடினமாக வேலை செய்வது ஆகியவை உட்படுகின்றன.

நாம் அடைய வேண்டிய எல்லையும், நாம் கடக்க வேண்டிய இடைவெளியும் தெரியாவிட்டால் நாம் குறிப்பிட்ட இலட்சியத்தை அடைய முடியாது.

நாம் ஒரு இலட்சியத்தை வைக்க வேண்டும், உருவாக்கிக் கொள்ள வேண்டும். அதை அடைய நாம் திட்டங்கள் தீட்டி வழி முறைகளை உருவாக்கிக் காலத்தைக் கணக்கிட்டுச் செயலில் இறங்க வேண்டும்.

உங்கள் இலட்சியத்தை இன்றே முடிவு செய்யுங்கள். கடந்து போன காலத்தைப் பற்றி கவலைப்படாதீர்கள். காலம் கடந்து போனது போனது தான், இனி திரும்ப வரப்போவது இல்லை. இனி இருக்கின்ற காலத்தையாவது சரியாகப் பயன்படுத்துவோம்.

இலட்சியத்தை முடிவு செய்வதை சாதாரணமாக நினைக்காதீர்கள்.

இலட்சியம் உங்கள் வாழ்க்கைப் பிரச்சனை. இலட்சியத்தை முடிவு செய்வதைத் தள்ளிப் போடப் போட நீங்கள் அடைய வேண்டிய வெற்றிகளும் அனுபவிக்க வேண்டிய சுகங்களும் தள்ளிக் கொண்டே போகும்.

இலட்சியத்தை ஒரே நாளில் முடிவு செய்ய முடியாது தான். ஆனால் ஒரு சில நாட்களில், ஓரிரு வாரங்களில் அல்லது ஓரிரு மாதங்களுக்குள் முடிவு செய்து விடலாம்.

தனி மனித, சமுதாய இலட்சியங்கள் ஆசைகளே இலட்சியங்களாக வளர்கின்றன. மலர்கின்றன. தனிமனிதன் தனக்கு என்று தேடிக் கொள்பவைகளும் இலட்சியங்கள் தாம்.

ஆனால் இந்த நாட்டில் வறுமை ஒழிய வேண்டும், சாதி வேறுபாடுகள் களையப்பட வேண்டும், ஏற்றத் தாழ்வுகள் அகற்றப்பட வேண்டும் என்று தன்னை மறந்து இந்த நாட்டுக்காகவும் உலகுக்காகவும் பாடுபடுகின்றவர்களின் ஆசைகளும் இலட்சியங்கள் தாம். தனிமனிதன் இலட்சியம் சிறப்பானவை என்றால் சமுதாய இலட்சியங்கள் மகத்தானவை என்று கூறலாம்.

ஒரு நாட்டிற்கு இந்த உலக சமுதாயத்திற்கு இந்த இரு வகையான இலட்சியங்களும் தேவை தான். உங்கள் லட்சியத்தையும் பெரிதாக வைத்துக் கொள்ளுங்கள் வெறுமனே ஒரு மொபைல் போன் வாங்குவதையோ,டிவி வாங்குவதையோ, கம்ப்யூட்டர், பைக், கார், அழகான வீடு போன்றவற்றை வாங்குவதையோ லட்சியமாகக் கொள்ளாதீர்கள்.

அவைகள் லட்சியத்தின் சிறு பகுதியாகவே இருக்கட்டும். நீங்கள் இதை விடவும் பெரிய லட்சியத்தைக் கொண்டிருங்கள். ஏனெனில், பெரும்பாலும் கார், பங்களா போன்ற இவைகளெல்லாம் தன்னம்பிக்கையினால் கிடைப்பதாக இருக்காது. அளவு கடந்த ஆசையின் வேகத்தினாலே கிடைப்பதாகவே இருக்கும். வாழ்வின் இலட்சியத்தை அடைய முயலுகிறவர்கள் வாழ்வே நீண்டதாகும். லட்சியத்தை அடைய செயல்கள் செய்தால் மட்டும் போதாது. செய்யும் ஒவ்வொரு செயலிலும் ஒரு இலட்சியமாக இருத்தல் வேண்டும்.

புதுச்சேரி சுகுமார்

தட்டச்சு செய்யும்போது ஆங்கில எழுத்துக்கள் வரிசையாக வராதது ஏன்!

நாம் தினமும் பயன்படுத்தும் கம்ப்யூட்டர் விசைப்பலகைகளில் ஏன் எழுத்துக்கள் 'A, B, C' என்று நேர் வரிசையில் இல்லாமல், 'Q, W, E, R, T, Y' என கண்டபடி கலைந்து கிடக்கின்றன? என்பதை கண்டிப்பாக யாராவது நமக்குள்ளேயே கேட்டிருப்போம்.

இதற்கான விடை நாம் நினைப்பது போல சாஃப்ட்வேர் உலகத்தில் இல்லை; மாறாக, 150 ஆண்டுகள் பழமையான டைப்ரைட்டர் (Typewriter) வரலாற்றில் ஒளிந்திருக்கிறது!

இன்று உலகளவில் அதிகம் பயன்படுத்தப்படும் QWERTY கீபோர்ட் வடிவமைப்பு, 1870களில் கிறிஸ்டோபர் லாதம் ஷோல்ஸ் (Christopher Latham Sholes) என்பவரால் உருவாக்கப்பட்டது. டைப்ரைட்டர்களின் ஆரம்பக் காலத்தில், விசைகள் அனைத்தும் அகரவரிசையில்தான் (Alphabetical order) அமைக்கப்பட்டிருந்தன.

ஆனால், அதில் ஒரு பெரிய சிக்கல் எழுந்தது. வேக வேகமாக டைப் செய்யும் போது, அடுத்தடுத்து வரும் எழுத்துக்களின் இயந்திரக் கைகள் (Mechanical arms) ஒன்றுடன் ஒன்று மோதி, சிக்கிக் கொள்ளத் (Jamming) தொடங்கின.

இயந்திர கைகள் (டைப் ரைட்டரில் எழுத்துகளை டைப் செய்யும் சிறிய உலோக கரங்கள் type bars) சிக்கிக் கொள்வதைத் தடுக்க, கிறிஸ்டோபர் ஷோல்ஸ், அவரது சக ஊழியர் கார்லோஸ் கிளிடன் மற்றும் கல்வியாளர் அமோஸ் டென்ஸ்மோர் ஆகியோருடன் கைகோர்த்தார்.

அவர்கள் ஒரு தந்திரத்தைக் கையாண்டனர். ஆங்கிலத்தில் அடிக்கடி பயன்படுத்தப்படும் எழுத்துக்களை (உதாரணமாக T, H, E போன்றவை) விசைப்பலகையின் வெவ்வேறு திசைகளில் பிரித்து வைத்தனர். இதனால் ஒரு எழுத்தை தட்டும்போது, அதற்கு அடுத்த எழுத்துக்கான இயந்திரக் கை தூரத்திலிருந்து நகர்வதால், அவற்றுக்கிடையேயான மோதல் முற்றிலும் தவிர்க்கப்பட்டது. இப்படி உருவானதுதான் 'QWERTY' வடிவமைப்பு. இது 1878ல் காப்புரிமையும் பெற்றது.

ரெமிங்டன் நம்பர் 2 (Remington No. 2) என்ற வணிகரீதியான முதல் வெற்றிகரமான டைப்ரைட்டரில் இந்த முறை பயன்படுத்தப்பட்டதால், இதுவே உலகளாவிய தரநிலையாக மாறியது.

டைப்ரைட்டர்களின் காலம் முடிந்த பிறகு இது ஏன் மாறவில்லை?

கம்ப்யூட்டர்கள் வந்த பிறகு, இயந்திரக் கைகள் மோதும் சிக்கல் தீர்ந்துவிட்டதே, அப்புறம் ஏன் இந்த பழைய முறையைத் தொடர வேண்டும்? காரணம் ஒன்றுதான் பழக்கவழக்கம்! மக்கள் ஏற்கனவே QWERTY முறையில் டைப் செய்யப் பழகிவிட்டதால், கம்ப்யூட்டர் கீபோர்டுகளிலும் அதே முறையே நீடித்தது. காலப்போக்கில், இதனுடன் ஃபங்கஷன் கீகள், அம்புக்குறிகள் மற்றும் எண்களுக்கான விசைகள் மட்டுமே கூடுதலாக இணைக்கப்பட்டன.

இதற்கு மாற்றாக, விரல்களின் சோர்வைக் குறைத்து, டைப்பிங் வேகத்தைக் கூட்டும் நோக்கில் டுவோராக் (Dvorak Simplified Keyboard) மற்றும் கோல்மேக் (Colemak) போன்ற பல புதிய வடிவமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், QWERTY-யின் ஆதிக்கத்தை யாராலும் அசைக்க முடியவில்லை.

சுருக்கமாகச் சொன்னால், அன்றைய மெக்கானிக்கல் சிக்கலைத் தீர்க்கப் பிறந்த QWERTY, இன்று நமது விரல்களின் பிரிக்க முடியாத பழக்கமாக மாறி சிம்மாசனம் போட்டு அமர்ந்திருக்கிறது!

இந்த கீபோர்டில் A-Z, 09, ஸ்பெஷல் கேரக்டர்கள் என சொல்லப்படும் @,$,% உள்ளிட்டவை இருக்கும். அது போல் ஃஎப் 1 முதல் ஃஎப் 12 வரை பட்டன்கள் இருக்கும். மேலும் Ctrl, Alt, Esc உள்ளிட்டவைகளும் இருக்கும். அது போல் Home, End, Up, Down, Right, Left, Delete உள்ளிட்டவை இருக்கும்

தகவல் :விளையாட்டு உலகம் குருசாமி

பார்வை தரும் கண்ணை கவனமாக பார்த்துக் கொள்வோம்!

கண்ணுக்குள்ளேயே அறிகுறிகள் இல்லாமல் வளரக்கூடிய புற்றுநோய் இருப்பது உங்களுக்குத் தெரியுமா?

அது கண் மெலனோமா (Ocular Melanoma) எனப்படும் புற்றுநோய். இது அரிதாகக் காணப்பட்டாலும், பெரியவர்களில் ஏற்படும் முதன்மை கண் புற்றுநோய்களில் மிகவும் பொதுவான வகையாகும். ஆரம்பத்திலேயே கண்டறிந்தால், சிகிச்சை வெற்றிகரமாக அமையும் வாய்ப்பு அதிகரிக்கும்.

கண் மெலனோமா என்றால் என்ன?

இது மெலனோசைட்கள் (Melanocytes) எனப்படும், கண்களுக்கு நிறமளிக்கும் மெலனின் (Melanin) உருவாக்கும் செல்களில் தோன்றும் புற்றுநோயாகும். பெரும்பாலானவை கண்ணின் உவியா (Uvea) பகுதியில், குறிப்பாக கோராய்டு (Choroid) பகுதியில் உருவாகின்றன.

இந்த நோயின் ஆரம்ப கட்டங்களில் பலருக்கு எந்த அறிகுறியும் இருக்காது. அதனால், வழக்கமான கண் பரிசோதனையின் போது மட்டுமே இது கண்டறியப்படலாம்.

* மங்கலான பார்வை அல்லது பார்வை குறைதல்.
* திடீரென ஒளி மின்னுவது போலத் தோன்றுதல்.
* கண் முன் கருப்பு புள்ளிகள் (Floaters) திடீரென தோன்றுதல் அல்லது அதிகரித்தல்.
* பார்வைப் பரப்பின் ஒரு பகுதி மறைதல்.
* சிலருக்கு கருவிழியில் கருமையான புள்ளி தோன்றுதல்.
* அரிதாக, கண் கருவிழியின் வடிவம் அல்லது நிலை மாறுதல்.

யாருக்கு ஆபத்து அதிகம்?

பின்வரும் நபர்களுக்கு ஆபத்து சற்று அதிகமாக இருக்கலாம்:

* நீலம் அல்லது பச்சை நிறக் கண்கள்.
* வெளிர் நிறத் தோல்.
* 50 வயதிற்கு மேற்பட்டவர்கள்.
* சில அரிதான மரபணு குறைபாடுகள்.
* கண்ணுக்குள் உள்ள மச்சங்கள் (Nevi) இருப்பவர்கள்.

UV கதிர்கள் காரணமா?

சூரியனின் புற ஊதாக் கதிர்கள் (UV) தோல் மெலனோமாவுக்கு முக்கிய காரணம் என்பது



நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால், கண் மெலனோமாவில் அதன் பங்கு இன்னும் முழுமையாக உறுதி செய்யப்படவில்லை. இருப்பினும், ஹிகூழி பாதுகாப்பு கொண்ட கண்ணாடி அணிவது கண்களின் ஆரோக்கியத்திற்கு நல்லது.

எப்படி கண்டறிவது?

கண் மருத்துவர் கண் அடிப்பகுதி (Fundus) பரிசோதனை, கண் அல்ட்ராசவுண்ட், OCT ஸ்கேன் மற்றும் பிற சிறப்பு பரிசோதனைகள் மூலம் இதைக் கண்டறிய முடியும்.

சிகிச்சை உள்ளதா?

ஆம். கட்டியின் அளவு மற்றும் இருப்பிடத்தைப் பொறுத்து:

* கதிர்வீச்சு சிகிச்சை
* லேசர் சிகிச்சை
* அறுவை சிகிச்சை
* சில கடுமையான நிலைகளில் கண்ணை அகற்றும் அறுவை சிகிச்சை போன்ற சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன.

எப்போதும் நிலைத்திருக்கும் செல்வம் கல்வி!

– கல்வியாளர் K.V.K@R.V.S.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். அதைத் தவிர மற்றவை அதாவது சொத்து உள்ளிட்டவை நிலையான செல்வங்கள் அல்ல. வள்ளுவர் சொன்ன இந்த குறளுக்கு ஏற்ப எல்லோரும் கல்வி கற்க வேண்டும். எல்லாமும் கற்க வேண்டும். கல்லாமை என்பது இங்கு இல்லாமை ஆக இருக்க வேண்டும் என்ற சிந்தனை உடையவர் ஆர்.வி.எஸ். கல்வி குழும நிறுவனங்களின் தலைவர் ஐயா கே.வி.குப்புசாமி அவர்கள்.

சேர்மன் பெற்ற ஆயிரக்கணக்கான விருதுகளில் சில

சேர்மன் டாக்டர் கே வி குப்புசாமி ஐயா அவர்கள் 80 வயதை கடந்த போதிலும் 20 வயது இளைஞராக சுறுசுறுப்பாக விறுவிறுப்பாக இன்றும் மதி நுட்பத்துடன்.. அனைவரிடமும் அன்பு.. பண்பு.. பரிவு.. பாசம் நேசமுடனும்.. அறிவுடனும்.. ஆற்றலுடனும்.. மனிதநேயத்துடனும் தன்னைக் காண வருவோரை தமிழர் விருந்தோம்பல் உயர் எண்ணத்துடன் வரவேற்று அறுசுவை உணவு அளித்து அனைவர் உள்ளத்திலும் சிகரமாக உயர்ந்து நிற்கும் மாமேதையாக திகழ்பவர்.

ஆர்விஎஸ் இன்ஜினியரிங் கல்லூரி ஆர். வி.எஸ். சித்த மருத்துவ கல்லூரி, ஆர். வி.எஸ். ஆயுர்வேத கல்லூரி, ஆர்.வி. எஸ். பல் மருத்துவ கல்லூரி, ஆர்.வி.எஸ். ஆர்க்கிடெக்ட்கல்லூரி என்று 60க்கும் மேற்பட்ட பிரம்மாண்டமான ஆர். வி. எஸ். கல்வி நிறுவனங்களை சூலூர் கண்ணம்பாளையம், திண்டுக்கல் ,தஞ் சாவூர் போன்ற பல ஊர்களில் நிறுவி ஆர் வி.எஸ்.கல்வி சாம்ராஜ்யத்தின் ஒப்பற்ற ஈடு இணையற்ற தலைவராக சேர்மனாக பல ஆண்டுகளாக பல மாணவர்கள்

மாணவிகளின் விருப்பமான கல்விக் கனவுகளை நிறைவேற்றி வரும் கல்வித் தந்தையாக விளங்குகிறார்.

எளிய பின்னணியில் இருந்து வந்து, தமிழகம் மற்றும் பிற மாநிலங்களில் 60க்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களை உருவாக்கியுள்ளார். திரு. குப்புசாமி அவர்களால் நிறுவப்பட்ட ஆர்.வி.எஸ். குழுமம், பள்ளிக் கல்வி முதல் ஆராய்ச்சிப் படிப்புகள் வரை (LKG to PG) பலதரப்பட்ட கல்வி நிறுவனங்களை நிர்வகித்து வருகிறது.

மறைந்த தனது மனைவி மகனை தெய்வங்களாக வணங்குகிறார். மகன் ரத்தினவேல் சுப்பிரமணியம் என்ற பெயரின் சுருக்கம் தான் R.V.S. என்ற கல்வி நிறுவனத்தின் பெயர்.

பல்வேறு துறைகள்: பொறியியல், கலை மற்றும் அறிவியல், மருத்துவம், செவிலியர், மருந்தியல், மற்றும் கல்வியியல் போன்ற பல துறைகளில் கல்லூரிகள் செயல்படுகின்றன.

கிராமப்புற மற்றும் பின்தங்கிய மாணவர்களுக்குக் குறைந்த கட்டணத்தில் உலகத்தரம் வாய்ந்த கல்வியை வழங்குவது இவருடைய முதன்மைக் குறிக்கோள் ஆகும். கல்வி மற்றும் சமூகப் பணிகளுக்காக இவர் பல மதிப்புமிக்க விருதுகளைப் பெற்றுள்ளார்:

இத்தாலியின் டையனோரா (Dianora) பல்கலைக்கழகம் 1993 ஆம் ஆண்டு இவருக்கு கல்வியியலில் முனைவர் பட்டம் (Ph.D.) வழங்கியது.

1994ஆம் ஆண்டு இன்டர்நேஷனல் ஃப்ரெண்ட்ஷிப் சொசைட்டி ஆஃப் இந்தியா (International friendship society of India) இவருக்கு இந்த விருதை வழங்கியது.

2014 ஆம் ஆண்டு க்யிம்ப்ரோ அறக்கட்டளையின் (Qimpro Foundation) பிளாட்டினம் தரநிலை விருதையும்

பெற்றுள்ளார்.

விவசாயத்தின் மீதான அவரது தணியாத ஆர்வத்தின் விளைவாக, தென்காசி, தடங்குளம், தஞ்சாவூர், செம்பட்டி மற்றும் செங்கத்துறை ஆகிய இடங்களில் செழிப்பான விவசாயப் பண்ணைகள் உருவாகியுள்ளன.

குறிப்பாக இயற்கை விவசாயத்தின் அவசியத்தையும் உணர்த்தும் வகையில் செயல்முறைகள் செய்து காட்டப்படுகின்றன.

யாரும் நோயால் பாதிக்கக் கூடாது என்கிற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் சுகாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற அவரது அக்கறை, ஆர்விஎஸ் அலோபதி, ஆயுர்வேத, ஹோமியோபதி மற்றும் சித்த மருத்துவமனைகள் மற்றும் அதற்கேற்ற கல்வி நிறுவனங்கள் செயல்படுகின்றன.

கல்வி மட்டுமே நிலைத்த செல்வம் என்ற நமது வள்ளுவரின் வாக்குக்கு இணங்க நமது தேசத்தின் செழிப்பையும் சமூகப் பொருளாதார நல்வாழ்வையும் மேம்படுத்துவதற்கு, கல்வி முறையை விட சிறந்த வழி இருக்க முடியாது என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஆர்.வி.எஸ் கல்வி அறக்கட்டளையாகிய நாங்கள், தமிழ்நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள பல்வேறு நிறுவனங்கள் மூலம் உங்களுக்குத் தரமான கல்வியை வழங்குகிறோம்.", என்று பெருமையோடு குறிப்பிடுகிறார் குப்புசாமி ஐயா.

ஆர் வி எஸ் ஆறுபடை முருகன் கோவில்.

ஆர்விஎஸ் திருப்பதி வெங்கடாஜலபதி கோவில்.

ஆர் வி எஸ் பகவதி அம்மன் கோவில் பல திருக்கோயில்களை உருவாக்கி ஆன்மீகச் செம்மலாக அனைவராலும் போற்றப்படுபவர் குப்புசாமி ஐயா.

கல்வி ஆன்மீகம் விவசாயம் சமூக சேவை என்று பல்வேறு தளங்களில் கோலோச்சி கொண்டிருக்கும் குப்புசாமி ஐயாவை மக்கள் தரும் புகழாரத்துடன் மத்திய அரசு வழங்க வேண்டிய பத்மஸ்ரீ விருதும் கிடைக்க வேண்டும் என்றும் எல்லோரும் எதிர்பார்க்கின்றனர். நமது மித்ரா டைம்ஸ் சார்பில் அவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவிக்க வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

சந்திப்பு/ புகைப்படங்கள்

விஜயா கண்ணன்

மூத்த பத்திரிகையாளர், மதுரை

POSTED AT EGMORE/RMS. PATRIKA CHANNEL. POSTED ON. 1-7 July 2026
MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/2025-2027
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month
WPP No. TN/PMG(CCR)/WPP-609/2025-2027

கோவை சரவணம்பட்டியில் அமைந்துள்ள கௌமார மடத்தில் தனது மகள் சினேகா மூர்த்தியுடன் மித்ரா டைம்ஸ் ஆசிரியர் திரு.எம்.எஸ்.மூர்த்தி அவர்கள். உடன் நண்பர்கள், தொழிலதிபர்கள்.

From:

MITRA TIMES ,Tamil and English monthly 101,Inchakkal Block, Chitra Avenue 9, Choolaimedu High Road, Chennai .600094. 044-23744661,23743007/8. mitratimes2015@gmail.com, www.mitratimes.com

Printed, Owned and Published by M.SUNDARAMOORTHY, Printed at SRI PADMALAYA PRINTERS, No.8/18, Manali Salai, Korukupet, Chennai - 600 021. Published at No.602, Suruthi Block, Chitra Avenue, No.9, Choolaimedu High Road, Chennai - 600 094. Editor M.SUNDARAMOORTHY